Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 10 ஞாயிற்றுக்கிழமை (23-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 116

# ஆளுங்கட்சி வசம் அதிக சபைகள்; ஆனால் வாக்கு 50%க்குக் குறைவு!

## ஐ.தே.க.தலைவர் ரணிலுக்கு சவால்

கொழும்பு, மார்ச் 23

தென்னிலங்கையின் பதினேழு மாவட்டங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில், ஆளுங்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மொத்தமுள்ள 238 சபைகளில் 194 சபைகளைக் கைப்பற்றி பெரு வெற்றி பெற்றது.

ஆனால் அக்கட்சிக்கு தேர்தலில் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 50 சத விதத்துக்கும் குறைவாகவே (48·97%) கிடைத்தது.

தேர்தல் முடிவுகள் சந்திரிகா அரசு மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை உறுதி செய்வதாகவும், அரசின் திட்டங்களை மக்கள் ஆதரிப்பதனையே வெளிப்படுத்துவதாகவும் ஆளுங்கட்சி வட்டாரங்கள் தெரிவித்த போதிலும்— எந்தக் கட்சியையும் தாங்கள் வெற்றி பெற்றதாக உரிமைகொண்டாட முடியாது என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணிலுக்கு விடப்பட்ட பெரும் சவாலாகும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மொத்தமுள்ள 238 உள்ளூராட்சி சபைகளுக்குமாகப் பதிவு செய்யப்பட்ட 97 லட்சம் ...... வாக்காளர்களில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## 194 உள்ளூராட்சிச் சபைகளில் பொ. ஐ. முன்னணி வென்றது

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெரு வற்றியீட்டியிருக்கிறது.

மொத்தமாக 238 உள்ளூராட்சி சபைகளில் 194 சபைகளை பெரும்பான்மை பலத்துடன் கைப்பற்றி பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றிபெற்றுள்ளது.

12 மாநகர சபைகளில் ஏழு மாநகர சபைகளையும்—

31 நகரசபைகளில் 20 நகர சபைகளையும்—

195 பிரதேச சபைகளில் 167 பிரதேச சபைகளையும் இக்கட்சி கைப்பற்றியது.

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, காலி, இரத்தினபுரி, மாத்தறை, மொரட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 3 ஆவது அரசியல் சக்தியாக உருவெடுத்துவரும் ஜே. வி. பி

### மக்கள் ஐக்கிய முன்னணி படுதோல்வி

கொழும்பு, மார்ச் 23

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி என்பனவற்றுக்கு அடுத்தபடியாகப் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் ஜே. வி. பி கட்சி கணிசமான வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

தென்னிலங்கையில் ஜே. வி. பி. கட்சி மக்கள் ஆதரவைப் பெற்று தனி ஒரு கட்சியாகப் பரிணமித்து வருவதை தேர்தல் முடிவுகள் மூலம் அவதானிக்க முடிவதாகப் பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இம்முறை தேர்தலில் 192 உள்ளூராட்சி சபைகளில் ஜே. வி. பி போட்டியிட்டது. எந்த ஓர் உள்ளூராட்சி சபை

(10ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரசபை மீண்டும் ஐ. தே. கவிடம்

### கணேசலிங்கம் தோல்வி

கொழும்பு, மார்ச் 23

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் அதிக முக்கியத்துவத்துடன் எதிர்பார்க்கப்பட்ட கொழும்பு மாநகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கொழும்பு மாநகர சபைக்கு வேட்பாளராகப் போட்டியிட்ட கரு ஜெயதிலக்க கொழும்பு மாநகர மேயராகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாநகர சபையில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 278 வாக்குகளைப் பெற்று 27 ஆசனங்களைக் கைப்பற்றி உள்ளது.

கொழும்பு மாநகர

(10 ஆம்பக்கம் பார்க்க )

## அரசின் வன்முறைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம்

### ரணில் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது அரசு வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இத்தேர்தலில் மேற்கொண்ட, வன்முறைகள் அத்துமீறல்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க தனது சட்டத்தரணிகள் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார். (இ-10)

## மனித உரிமைகள் செயலணிக் குழு: கலைக்க வேண்டாமென கோரிக்கை

''தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஒரு பிரிவாக மனித உரிமைகள் செயலணிக்குழு இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்''

இப்படி மனித உரிமைகள் செயலணிக் குழு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய மனித உரிமைகள் குழுவை அரசாங்கம் அமைத்த பின்னர், வி. ரி. ஜான்ஸ் தலைமையில் இயங்கி வந்த மனித உரிமைகள் செயலணிக் குழுவை கலைக்க அரசாங்கம் முடிவு செய்தது தெரிந்ததே.

''மனித உரிமைகள் செயலணிக் குழுவின் பணி சமுதாயத்துக்குத் தேவைப்படுகிறது. அந்த அமைப்பைக் கலைக்காது தொடர்ந்து இயங்க அனுமதிக்க வேண்டும். நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் அந்த அமைப்பில் பணிபுரிவதால் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரிவாக அதனை இயக்கலாம்'' என்று மனித உரிமைகள் செயணிக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-150

## முச்சந்தி முரளி



அப்ப ரணில் முந்திக் கொண்டார் போல ...!

## இரவு ஊரடங்கு அமுல்

கொழும்பு மாவட்டத்தில் நேற்று மாலை 6.00 மணியிலிருந்தும் —

உள்ளூராட்சிதேர்தல் இடம் பெற்ற ஏனைய மாவட்டங்களில் இரவு 9.00 மணியிலிருந்தும் — ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

இன்று காலை 5.00 மணிக்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது. (இ-5)

## அமைச்சரவையிலிருந்து ஸ்ரீமானி விரைவில் வெளியேற்றப்படலாம்

கொழும்பு, மார்ச் 23

இம்மாத இறுதியில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் மேற்கொள்ளப்படவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின்போது போக்குவரத்து, மகளிர் விவகார அமைச்சர் ஸ்ரீமானி அத்துலத்முதலி அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்படுவது உறுதியாகிவிட்டது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

உள்ளூராட்சித் தேர்தல்களில் பொ. ஐ. முவின் பிரசார மேடையில் அவரைப் பேசுமாறு இறுதியாக விடுக்கப்பட்ட கோரிக்கையையும் அவர் ஏற்காதபடியால், அவரை அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தமது நெருங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் காணாமற் போனோர் நலன்களைக் கவனிக்க அமைப்பு

### நேற்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

''சூரியப்பிரகசாம்'' இராணுவ நடவடிக்கையின் பின் யாழ். மாவட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்களின் நலன்களைக் கவனிக்க ''காணாமல் போனோர் பிள்ளைகளின் பெற்றோர் சங்கம்'' என்ற அமைப்பு நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்.ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் அதன் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கே. வி. கே. ஜெகன் தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

அன்னையர் முன்னணியின் ஏற்பாட்டில் நடந்த இக்கூட்டத்தில் காணாமற்போனோர் சார்பாக 404 பேர் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உ. பாஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யால பகுதிக்குள் புலிகள் ஊடுருவுவதை தடுங்கள்

## வன வள அமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 23

நாட்டின் தேசிய சொத்தான யால சரணாலயத்துக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வனவள பாதுகாப்புச்சங்கம் ஜனாதிபதியைக் கோரியுள்ளது.

உள்ளூர், வெளியூர் யாத்திரிகர்கள் தற்போது செல்ல முடியாதவாறு யால பகுதி மூடப்பட்டுள்ளது. கடந்த மாதம் அங்கு சென்ற வெளிநாட்டுத் தம்பதிகளை விடுதலைப் புலிகள் கடத்திப் பின்னர் விடுதலை செய்தனர்.

அவர்கள் பயணம் செய்த ஜீப் வண்டியை புலிகள் எரித்து விட்டனர். அத்துடன் நிலக்கண்ணிகளைப் புலிகள் அங்கு புதைத்து வைத்துள்ளனர். இவ்வாறு அந்த அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளகடிதத்தில்தெரிவித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

(ஐ-3-150)

## தேர்த்திருவிழா

வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேதபத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் சிறப்புற நடைபெறவுள்ளது. நண்பகல் 12.00 மணிக்கு வசந்த மண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தருளுவார். (ஐ)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இராமலிங்கம் (அர்ச்சுனன்)

இல, 03, ஐயனார் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தினை நிரந்தர முகவரியாகவும், யோகபுரம் மல்லாவியினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செட்டிகுளம் பிரபல கமக்காரருமான கந்தையா இராமலிங்கம் அவர்கள் 18-3-97 இல் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன் (ஜேர்மனி), தமிழ்ச்செல்வன் (சுவிஸ்), உமாரஞ்சினி, மதிவதனி, தமிழ்வாணன், சுஜாந்தினி, ஜெயதீபன், வாகீசன், தசந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசாந்தசீலன் (விவசாய திணைக்களம்) அவர்களது மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 19-3-97 அன்று மல்லாவியில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
ச. நித்தியானந்தன்

பண்ணாகம், சுழிபுரம். (சி/364)

## திருமதி
## சிவப்பிரகாசம் சின்னத்தங்கம்

மீசாலை வடக்கு மீசாலையைச் சேர்ந்த திருமதி சின்னத்தங்கம் 21-3-97 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் (ஓய்வு பெற்ற பொது முகாமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி — வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஓய்வு பெற்ற வங்கி ஊழியர்), இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி, தனலட்சுமி (ஆசிரியை, அல்லாரை அ. த. க. வித்.), மகேஸ்வரி (ஆசிரியை, மந்துவில் ஸ்ரீ பாரதி வித்.), திருச்செல்வம் (U. K) ஜெயலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பேரம்பலம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் ம. வித்), கேசவன் (அதிபர், மந்துவில் ஸ்ரீ பாரதி வித்.), மஞ்சுளா (U K) ஆகியோரின் அன்பு மாமியாரும் சகிலா, சஜந்தன் (ஆசிரியர், இடைகுறிஞ்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்) பிரதீபன், ஆரணி, அருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திலகவதிப்பிள்ளை (Canada), காலஞ்சென்ற ஆறுமுகம், தங்கம்மா, இராஜரட்ணம் (ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார்), செல்லமுத்து (U. K) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலையிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று (22-3-97) நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்;
கு. கேசவன்.
(மருமகன்)

சிவபுரம்,
மீசாலை வடக்கு,
மீசாலை.

(45953)

## செல்லத்துரைக்குருக்கள்
## சாம்பசிவக்குருக்கள்

அராலி, ஆவரம்பிட்டி, ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ செல்லத்துரைக்குருக்கள் சாம்பசிவக்குருக்கள் 21-3-97 இல் சிவபதம் எய்தி; 22-3-97இல் ஈமக்கிரியைகள் அராலியில் நடைபெற்றன. அன்னார் இராஜேஸ்வரி அம்பாளின் அன்புக் கணவரும், இராசலட்சுமி அம்மாவின் தந்தையும், செ. யோகநாதசர்மாவின் சிறிய தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை அடியார்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
இராசலட்சுமி அம்மா
(மகள்)
யோகநாதசர்மா
(பெறாமகன்)

அராலி அம்மன் கோயில்,
அராலி.

(9424)

# இராணுவப் பேரழிவுகளை இனியும் ஏற்றுக்கொள்ள நாடு தயாரில்லை

## ஐலண்ட் ஆசிரியர் தலையங்கம் எச்சரிக்கிறது

(08-03-1997 ஆம் திகதிய ஐலண்டில் வெளியான ஆசிரியர் தலையங்கத்திலிருந்து சில பகுதிகள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.)

இராணுவத்துக்கு ஏற்படும் பேரழிவுகளை விருப்பு, வெறுப்பற்ற உணர்வுடன் அல்லது சிலர் சொல்வது போல தவிர்க்கமுடியாத கர்மவினை என்று எடுத்துக் கொள்ள இலங்கையர்கள் பழகிக்கொண்டுவிட்டனர்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட தோல்வி மற்றும் உயிரிழப்புக்கள் மக்களிடையே உணர்வலைகளை ஏற்படுத்தியது. இப்போது அவ்வகையான உயிரிழப்புகள் அதிகரிக்க, மக்களின் உணர்வுகளும் மரத்துப்போய் விட்டன.

சீனன்வாடி விமானம், வவுணதீவு இராணுவ முகாம் மற்றும் மட்டக்களப்பு 3 ஆம் படையணித் தலைமையகம் ஆகியவற்றின் மீதான புலிகளின் தாக்குதல்கள் கொழும்பில் அமைதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதல்கள் கொழும்பு மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குழப்பமடையச் செய்யவில்லை. டிஸ்கோ டான்ஸ், கிரிக்கெட் விளையாட்டு — இப்படிக் கொழும்பு மக்கள் அக்கறை காட்டினார்கள். தாக்குதல்கள் பற்றிக் கவனிக்கவில்லை.

எதிர்காலம் பற்றி நினைப்பவர்கள் மட்டுமே இந்தாக்குதல்கள், பேரழிவுகள் பற்றி அக்கறை காட்டினர்; இவை தொடரலாமா என்று கவலைப்பட்டனர்.

சீனன்வாடி விமானத் தளத்தினுள் புலிகள் ஊடுருவல் வெற்றியளித்திருந்தால், அது பேரழிவாகவே முடிந்திருக்கும். சீனன்வாடியில் பாதுகாப்பு அரண்களுக்குள் புலிகள் எவ்வாறு ஊடுருவலை மேற்கொண்டனர்? போதிய பாதுகாப்பு முக்கிய விமானத் தளத்துக்கு வழங்கப்படவில்லையா? வவுணதீவு முகாம் தாக்குதலும் அப்படித்தான் இடம்பெற்றது. நேரம் வந்து விட்டது. 14 ஆண்டுகளாக நடந்து வரும் வடக்கு-கிழக்கு யுத்தம்பற்றி மொத்த மதிப்பீடு ஒன்றை மேற்கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது.

மதிப்பீடு இரண்டு பிரிவுகளாக மேற்கொள்ளப்பட வேண்டும். முதலாவது இக் காலப்பகுதியில் இடம்பெற்ற ஆயுதக் கொள்வனவுகள் பற்றியதாக இருக்க வேண்டும். ஆயுதக்கொள்வனவு பேரங்கள் பற்றி பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. முப்படைகளின் செயல்பாடுகள் பற்றி மதிப்பீடு அடுத்ததாக நடத்தப்படவேண்டும். இராணுவ போர்த்தந்திரோபாயங்கள் உட்பட சகல அம்சங்களும் மதிப்பீட்டின்போது பரிசீலிக்கப்படவேண்டும்.

தகுதி வாய்ந்த படை அதிகாரிகள் சிவிலியன்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அடங்கிய குழு ஒன்று இம்மதிப்பீட்டை நடத்த வேண்டும்.

இனியும் இராணுவப் பேரழிவுகளை முணுமுணுப்பு எதுவுமின்றி ஏற்றுக்கொள்ள நாடு தயாராகவிருக்காது.

நாம் இங்கு எழுப்பியதும் மக்களால் பேசப்படுகின்றதுமான இப்பிரச்சினைகள் குறித்து முப்படைத்தளகர்த்தராக (Commander in Chief) இருக்கும் ஜனாதிபதி சந்திரிகா மக்களுக்கு தக்க விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டும். ★

# தேவை

பாவித்த தமிழ் தட்டச்சு இயந்திரம் அலுவலகப் பாவனைக்கென அவசியம் தேவைப்படுகின்றது. இயந்திரத்தை விற்பனைக்கு வைத்திருப்போர் சங்குவேலி வடக்கு கிராம அலுவலருடன் தொடர்புகொள்ளவும்.

(சி/368)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.
## கலைப்பீடம்
## 1995/96, 1996/97
## இரண்டாம் ஆண்டு மாணவர்கள்

1995/96, கல்வியாண்டு, 1996/97 கல்வியாண்டு இரண்டாவது வருட கலை, வர்த்தகம், முகாமைத்துவம், நடனம், சங்கீத பட்டதாரி வகுப்புகளும், நடனம், சங்கீத டிப்புளோமா வகுப்புகளும் 1997, மே மாதம், 2 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பதிவாளர்.

(சி/366)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.
## கலைப்பீடம்
## 1996/97
## கல்வியாண்டு-முதலாண்டு மாணவர்கள்

1996/97 (கல்வியாண்டு) முதலாண்டு கலை, முகாமைத்துவம், வர்த்தகம் ஆகிய மாணவர்களுக்கான வகுப்புகள், 1997, மே மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகும்.

பதிவாளர்.

(சி/365)

# தன்னை மாமா என அழைப்பது குறித்து அனுருத்த விசனம்!

கொழும்பு, மார்ச் 23

''ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னை மாமா என்று அழைத்து வருகின்றார். அப்படி என்னை அவர் அழைக்கக்கூடாது. நான் அவருக்கு மாமா முறையும் இல்லை. அவர் என்னை மாமா என்று அழைப்பது எனக்கு அவமானமாகவும் உள்ளது''

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடந்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

16 வருடங்களாக அனுராபண்டாரநாயக்க சுதந்திரக் கட்சியை அழித்தார். இன்று அவர் ஐ. தே. கவில் இருக்கின்றார். ஐ. தே. கவிலேயே அவர் தொடர்ந்து இருக்கட்டும். அவரைத் தம்முடனேயே வைத்துக் கொள்ளுமாறு ரணிலிடம் கேட்டுக்கொள்கின்றேன் — இவ்வாறு அனுருத்த மேலும் தெரிவித்தார். (ஐ-156-3)

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மீது

# ரூபா 10 கோடி நஷ்டஈடு கோரி ஹமீட் வழக்குத் தொடர்வார்

கொழும்பு, மார்ச் 23

தன்னை மானபங்கம் செய்யும் விதத்தில் செய்தி ஒலிபரப்பியதாகத் தெரிவித்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் 10 கோடி ரூபா நஷ்டஈடு கோரி ஐ.தே.க. எம். பியான சாகுல் ஹமீட் வழக்குத் தாக்கல் செய்ய உள்ளார்.

ஐ. தே. க. செயலாளர் காமினி அத்துக்கொறள இதனைத் தெரிவித்தார்.

கட்டுகஸ்தோட்டையில் அச்சகம் ஒன்றில் மாதிரி வாக்களிப்பு அட்டையை ஐ தே.க தயாரித்து மக்களுக்கு விநியோகம் செய்ததாகவும் —

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது செய்தியில் இது குறித்துப் பிரஸ்தாபிக்கையில் போலி வாக்காளர் அட்டை தயாரித்ததாக தெரிவித்திருந்தது என்றும் ஐ தே. க. செயலாளர் தெரிவித்தார்.

''மக்களுக்கு வாக்களிக்கும் முறையை விளக்கும் வகையில் வாக்காளர் அட்டையை அச்சிட்டு விநியோகித்தோம். அதில் யானை, கண், பூ, மணி, கடிகாரம் போன்ற சின்னங்களும் இருந்தன.

இப்படி அவர் மேலும் கூறினார்.

இந்த விடயத்தில் எமது எம்.பியான சாகுல் ஹமீட்டைச் சம்பந்தப்படுத்தி செய்தி வெளியிட்டு அவரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மானபங்கப் படுத்தியுள்ளது என்றும் அவர் கூறினார். (இ-150)

## பவளக்கால் நடும் விழா

சங்கத்தானை தட்டாதெரு இத்தியடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சித்திரத் தேருக்கான பவளக்கால் நடும் விழா இன்று காலை 9.28 மணிக்கு இடம்பெறவுள்ளது. நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இந்த நிகழ்வில் கலந்து கொள்கிறார். (ஐ-4-31)

## 500 பயணிகள் இன்று கப்பலில்

காங்கேசன்துறையில் இருந்து 500 பயணிகளுடன் கப்பல் சேவை இன்று நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 548 க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ஒன்றுலகம்

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள்

அளவ்வை பிரதேசசபை
★ பொ. ஐ. மு— 29,006
வாக்கு — 13 உறுப்பினர்
★ ஐ. தே. க— 21172
வாக்கு — 8 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 1296
வாக்கு — 1 உறுப்பினர்

புத்தளம் நகரசபை
★ பொ. ஐ. மு. —5249
வாக்கு — 5 உறுப்பினர்
★ ஐ. தே. க. —3848
வாக்கு — 2 உறுப்பினர்
★ சுயேச்சைகுழு — 2
1304வாக்கு — 1 உறுப்பினர்
★ சுயேச்சைகுழு — 3
1150வாக்கு— 1 உறுப்பினர்

ஆனமடுவ பிரதேசசபை
★ பொ. ஐ.மு. —21307
வாக்கு — 12 உறுப்பினர்
★ ஐ. தே. க. —9107
வாக்கு — 4 உறுப்பினர்

புளத்சிங்கள பிரதேச சபை
★ பொ. ஐ. மு. —19455
வாக்கு — 10 உறுப்பினர்
★ ஐ. தே. க. —19031
வாக்கு — 8 உறுப்பினர்

மிகுந்தலை பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 5766
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 3869
வாக்கு — 3 உறுப்பினர்

பொல்காவல பிரதேச சபை
★ ஐ. தே. க — 17850
வாக்கு — 10 உறுப்பினர்
★ பொ. ஐ. மு. — 16751
வாக்கு — 8 உறுப்பினர்
★ சுயேச்சைகுழு — 1 —
5191 வாக்கு 2 உறுப்பினர்
★ ம. ஐ. மு. — 1478
வாக்கு — 1 உறுப்பினர்

குண்டகசாலைபிரதேசசபை
★ பொ. ஐ. மு — 22065
வாக்கு — 12 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 20686
வாக்கு — 9 உறுப்பினர்.
★ ம. ஐ. மு — 1011
வாக்கு — 1 உறுப்பினர்

அல்பிட்டிய பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 14680
வாக்கு.
★ ஐ. தே. க. — 11208
வாக்கு — 5 உறுப்பினர்.
★ ஜே. வி. பி — 1343
வாக்கு 1 உறுப்பினர்.
★ ம. ஐ. மு — 1545
வாக்கு 1 உறுப்பினர்.

பசறை பிரதேச சபை
★ ஐ தே. க— 17872
வாக்கு — 13 உறுப்பினர்.
★ இ. தொ. கா— 13243
வாக்கு — 8 உறுப்பினர்.
★ சுயேச்சைக்குழு — 1 —
1419 வாக்கு — 1 உறுப்பினர்.

உடுநுவர பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 21844
வாக்கு 12 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 20 279
வாக்கு — 9 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 1104
வாக்கு

உடப்புசலாவ பிரதேச சபை
★ பொ. ஐ மு— 25111
வாக்கு 14 உறுப்பினர்
★ ஐ. தே. க — 17456
வாக்கு — 8 உறுப்பினர்

மினிப்பே பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 13972
வாக்கு — 8 உறும்பினர்
★ ஐ. தே. க —9455
வாக்கு — 4 உறுப்பினர்

குருவிற்ற பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 28848
வாக்கு — 13 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 19147
வாக்கு — 8 உறுப்பினர்
★ சுயேச்சைகுழு -1 —
1356 வாக்கு — 1 உறுப்பினர்

அம்பலாங் கொடை பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 12768
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க — 10732
வாக்கு — 4 உறுப்பினர்

யடகும்புற பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 8115
வாக்கு — 6 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 7191
வாக்கு — 3 உறுப்பினர்.
★ ஜே. வி. பி. — 496
வாக்கு.
★ சுயேச்சை குழு — 338
வாக்கு.

பொல்பிட்டி ஹென பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 16116
வாக்கு — 9 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 12889
வாக்கு — 6 உறுப்பினர்.
★ ஜே வி. பி. — 952
வாக்கு — உறுப்பினர்.

கரந் தெனிய பிரதேச சபை
★ பொ. ஐ மு. — 19190
வாக்கு — 11 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 14104
வாக்கு — 7 உறுப்பினர்.
★ ம. ஐ. மு — 3157
வாக்கு — 1 உறுப்பினர்.

கலவான பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 10434
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 7236
வாக்கு — 3 உறுப்பினர்

கம்பஹா நகரசபை
★ பொ. ஐ. மு. — 3300
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 1871
வாக்கு — 3 உறுப்பினர்
★ ம. ஐ. மு. — 175
வாக்கு

கொலனை பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 8760
வாக்கு— 6 உறுப்பினர்
★ ஐ. தே. க — 7419
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 1219
வாக்கு

மாத்தளை பிரதேசசபை
★ பொஐ. மு — 6169
வாக்கு — 10 உறுப்பினர்
★ ஐ. தே. க — 5999
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 426
வாக்கு — 1 உறுப்பினர்

தெவிநுவர பிரதேசசபை
★ பொ. ஐ. மு. — 12470
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க — 6165
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 1902
வாக்கு —1 உறுப்பினர்
★ சுயேச்சைகுழு — 1138
வாக்கு—
★ ம. ஐ. மு — 89
வாக்கு

பன்வில பிரதேசசபை
★ ஐ. தே. க — 4612
— வாக்கு 3 உறுப்பினர்
★ பொ. ஐ மு— 4199
வாக்கு— 3 உறுப்பினர்
★ மலையலகம. மு —
308 வாக்கு
★ ஜே. வி. பி — 78
வாக்கு

பிபிலை பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 6889
வாக்கு— 5 உறுப்பினர்
★ ஐ. தே .க — 6365
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே வி. பி — 1043
வாக்கு — 1 உறுப்பினர்
★ சுயேச்சை குழு — 801
வாக்கு

ரம்போவ பிரதேசசபை
★ பொ. ஐ மு — 6654
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 5607
வாக்கு3 —உறுப்பினர்
★ஜே. வி. பி — 514
வாக்கு
★ சுயேச்சை குழு 241
வாக்கு

பலகெல பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 7479
வாக்கு — 6 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 5298
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 479
வாக்கு

உக்குவெல பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 13354
வாக்கு — 8 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 11121
வாக்கு — 5 உறுப்பினர்
★ ஜே வி. பி — 1029
வாக்கு — 1 உறுப்பினர்

அம்பாந்தோட்டை பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 12596
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ தே. க — 11638
வாக்கு — 4 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 3883
வாக்கு — 1 உறுப்பினர்

மாத்தறை பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 19285
வாக்கு — 14 உறுப்பினர்
ஐ. தே. க — 10619
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஜே. வி, பி — 1817
வாக்கு — 1 உறுப்பினர்
★ ம. ஐ. மு — 456
வாக்கு

ஹொரண நகரசபை
★ பொ. ஐ. மு — 2549
வாக்கு — 5 உறுப்பினர்
★ ஐ. தே. க — 2448
வாக்கு — 3 உறுப்பினர்
★ ம. ஐ. மு — 262
வாக்கு — 1 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 174
வாக்கு
★ சுயேச்சைகுழு — 1 —
29 வாக்கு

அயகம பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 8795
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க — 4003
வாக்கு — 2 உறுப்பினர்
★ சுயேச்சைகுழு 1 — 231
வாக்கு

சித்தமகரகம பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 11957
வாக்கு 7 உறுப்பினர்
★ ஐ. தே. க — 8512
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 4150
வாக்கு 2 உறுப்பினர்
★ ம. ஐ. மு—168 வாக்கு

மொனராகல பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 9199
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க — [illegible]
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 854
வாக்கு
★ சுயேச்சைகுழு — 1—
34 வாக்கு

யட்டவத்த பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 8493
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க — 5467
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 306
வாக்கு

ஹகடகஸ் கெலிய பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 7942
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 6129
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 506
வாக்கு
★ சுயேச்சை குழு — 1 —
300 வாக்கு

நாஉல பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 7019
வாக்கு — 6 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 5743
வாக்கு — 3 உறுப்பினர்.
★ சுயேச்சை குழு 1 —
407 வாக்கு.
★ ஜே. வி. பி. — 356
வாக்கு

பல்லேபொல பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 6363
வாக்கு 5 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 5678
வாக்கு — 3 உறுப்பினர்.
★ சுயேச்சைக் குழு 1 —
1037 வாக்கு—1 உறுப்பினர்.

வெள்ளவாய பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 9197
வாக்கு — 6 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 8937
வாக்கு — 4 உறுப்பினர்.
★ ஜே. வி. பி. — 1009
வாக்கு

மீகாதென்ன பிரதேச சபை
★ ஐ. தே. க. — 4087
வாக்கு—6உறுப்பினர்.
★ பொ. ஐ. மு. — 3141
வாக்கு — 3 உறுப்பினர்.
★ ஜே. வி. பி. — 140
வாக்கு

கெக்கிராவ பிரதேச சபை
★ பொ.ஐ. மு. — 16714
வாக்கு — 9 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 11266
வாக்கு — 5 உறுப்பினர்.

மதுள்ள பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 6016
வாகக்கு — 6 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 4393
வாக்கு — 3 உறுப்பினர்.
★ ஜே. வி. பி. — 772
வாக்கு — 1 உறுப்பினர்.
★ சுயேச்சைக்குழு 2 —
673 வாக்கு
★ சுயேச்சைக்குழு 1 —
201 — வாக்கு

யக்கல முல்ல பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 10862
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க — 8003
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 1116
வாக்கு — 1 உறுப்பினர்

தலவாக்கலை — லிண்டுல நகரசபை
★ ஐ. தே. க — 1335
வாக்கு — 5 உறுப்பினர்
★ பொ. ஐ. மு — 1231
வாக்கு 3 உறுப்பினர்
★ மலையக ம. மு — 396
வாக்கு — 1 உறுப்பினர்

அம்பத்கங்க கொறன பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 4014
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க — 3301
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே வி. பி — 117
வாக்கு

அகலவத்தை பிரதேச சபை
★ ஐ. தே. க — 18035
வாக்கு — 11 உறுப்பினர்.
★ பொ. ஐ. மு — 16111
வாக்கு — 08 உறுப்பினர்.
★ சுயேச்சைகுழு — 2 —
1403 வாக்கு உறுப்பினர் 01

தம்புள்ள பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 14167
வாக்கு 7 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 7717
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 1079
வாக்கு 1 உறுப்பினர்.

பன்வில பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 4199
வாக்ரு — 3 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 4612
வாக்கு — 6 உறுப்பினர்.

பிபில பிரதேச சபை
★ பொ.ஐ மு. — 6889 —
வாக்கு 5 உறுப்பினர்.
★ ஐ. தே. க. — 6365
வாக்கு — 3 உறுப்பினர்.
★ ஜே. வி. பி. — 1043
வாக்கு — உறுப்பினர்.

பல்லாவெல பிரதேச சபை
★ பொ. ஐ. மு — 7479
வாக்கு — 6 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 5298
வாக்கு — 3 உறுப்பினர்

களுத்துறை நகரசபை
★ பொ. ஐ மு — 7567
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க — 7348
வாக்கு —4 உறுப்பினர்
★ சுயேச்சை குழு — 1
1959வாக்கு— 1 உறுப்பினர்

கொலன்னாவ நகரசபை
★ ஐ. தே. க — 10986
வாக்கு — 6 உறுப்பினர்.
★ பொ, ஐ. மு — 9910
வாக்குகள் — 4 உறுப்பினர்.
★ ஜே. வி. பி — 1225
வாக்கு — 1 உறுப்பினர்.

## கௌரவிப்பு

யாழ். அரசினர் வைத்திய சாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று நடைபெற்ற வட பிராந்திய லயன்ஸ் கழகங்களின் ஒன்றுகூடல் விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற மேற்படி விழாவில் இப் பிராந்தியத்திலுள்ள லயன்ஸ் கழகங்கள் மேற்கொண்டு வரும் இலவச கண் பரிசோதனை — கண்சிகிச்சை ஆகிய சேவைகளில் ஈடுபட்டு வருவதைப் பாராட்டி பிராந்தியத் தலைவர் லயன். எஸ். எஸ். தங்கராஜா அன்பளிப்புச் செய்த விருதை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட 306B மாவட்ட பிரதி ஆளுநர் லயன். எஸ். தில்லைநாதன் டாக்டர் குகதாசனிடம் வழங்கினார்.

இதே வேளை கொழும்பிலிருந்து 306 B மாவட்ட ஆளுநர் லயன் சித்ரால் அமரதுங்கவினால் அனுப்பி வைக்கப்பட்ட பாராட்டுக் கடிதம் ஒன்றும் டாக்டர் குகதாசனிடம் வழங்கப்பட்டது.(ஐ-135)

## 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 18 — 02 — 1919



மறைவு: 18 — 03 — 1979

### அமரர் வ. தம்பிப்பிள்ளை

(முன்னைநாள் முதல்வர்,
புலோலி வேலாயுதம் மகா வித்தியாலயம்)

**திதி: 28- 3- 1997**

பாசத்தின் பெருமை சொல்லி
பார் புகழ கல்வியூட்டி
கற்றவர் மத்தியில் எம்மை
தலை நிமிர்ந்து வாழ வைத்த
தெய்வமே ஐயா!
நாம் வாழும் நேரத்தில் ஓடி
நீங்கள் சென்ற தெங்கே ஐயா!
வருடங்கள் பதினெட்டாகியும்
வற்றாத கண்ணீருடன்
வாடி நிற்கின்றோம்.

குடும்பத்தினர்.

ஞானாசாரியார் வீதி,
கரவெட்டி.

(சி/349)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி செந்தில்குமார் ஜெயா

(காங்கேசன் துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராசா ஆழ்வானாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகள்)

தாயது நினைவெல்லாம் மாயமாய் போனதேன்
தமையனின் கனவெல்லாம் தவிடுபொடியானதேன்
நாள்கள் நாற்பத்தைந்து ஓடினாலும் — உன்
நினைவுகள் எம்மை வாட்டுதம்மா!

பிரிவால் துயருறும்:
த, பூலோகநாதன்
(சின்னண்ணா)

வட்டுமேற்கு,
வட்டுக்கோட்டை.

(45955)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளுக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதே இன்றைய உலக நடைமுறை

## இலங்கை இதற்கு விதிவிலக்காக இருக்க முடியுமா?

உலகின் எதிர்கால வேலைத் திட்டத்தைத் தயாரித்த பிரபல ரோம் கழகத்தில் (Rome Club) சிறிலங்காவின் ஒரே பிரதிநிதியாக விளங்கும் கலாநிதி உவைஸ் அஹமட் அளித்த பேட்டியின் தொகுப்பு ''ராவய'' சிங்கள வார இதழில் வெளியாகியுள்ளது. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

சிறிலங்காவில் உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யுத்தம் என்பதை அரசாங்கமும் மற்றும் பலரும் மறந்து போயுள்ளனர். யுத்தம் நடைபெற்று வரும் வேளையில் பொருளாதார, சமூக முன்னேற்றம் குறித்து பேசுவதால் பயன் ஏற்படாது. அதிகமான மனித வளத்தையும் பொருளாதார வளத்தையும் யுத்தத்தில் விரயமாக்கிக் கொண்டு அதே நேரத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள முடியாது என்பதை நாம் அறிவோம்.

அழிவுக்குக் காரணமான யுத்தத்தை நடத்திவரும் வேளையில் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அழைப்புகள் விடப்படுகின்றன. ஒரு நாட்டில்யுத்தம் நடைபெற்று வரும்வேளையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களால் அந்நாட்டில் சுதந்திரமாகத் தங்கள் முதலீடுகளை மேற்கொள்ள முடியாது.

முதலீட்டாளர்களுக்கு தங்கள் முதலீடுகளை மேற்கொள்ள உலகில் எத்தனையோ நாடுகள் வசதிகளை வழங்க முன்வந்துள்ளன.என்பதை நாங்கள் மறக்கக் கூடாது. இந்தியா, வியட்னாம் போன்ற நாடுகள் முதலீட்டாளர்களுக்கு பல்வேறு வசதிகளை அளித்து வருகின்றன. பாகிஸ்தானின் புதிய பிரதமர் நவாஷ்ஷெரிப் வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிகிறது. இவ்வாறான நிலைமைகளை நாங்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். தற்போதுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் இப் பிரச்சினையை தொடர்ந்து நீடிக்க நாம் அனுமதிப்போமேயானால் நாட்டின் தென்பகுதியில் புதிய சமூக — பொருளாதாரப் பிரச்சினைகள் உருவாகுவதை தடுத்து நிறுத்த முடியாது.

சமூகத்தில் தோன்றும் பல புதிய பிரச்சினைகளுக்கு யுத்தமே அடிப்படைக் காரணமாகும்.

சமூகத்தில் உருவாகிவரும் புதிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகள் தோல்வியடைவதற்கு காரணம் யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதே ஆகும். இது எங்களது அரசியல் கொள்கைகளில் முக்கியத்துவம் பெறாததால் உருவாகியுள்ள பிரச்சினையாகும்.

துப்பாக்கிக் கலாசாரத்தைப்பற்றிச் சற்று சிந்திப்போம். இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் கூட ஆயுத மோதல்கள் இடம் பெற்றிருந்தன. ஆனால் இது அண்மைக்காலத்திலேயே துப்பாக்கிக் கலாசாரமாக மாறியுள்ளது. தற்போதைய அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் கூட இந்தக் கலாசாரம் இருந்துள்ளது. இருப்பினும் இதற்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசினால் மேற்கொள்ள முடியவில்லை.

அழிவைத் தரும் தற்போதைய அரசியல் மோதல்களுக்கு அதுவே காரணமாகும். எவ்வாறாயினும் துப்பாக்கிக் கலாசாரம் உருவானதற்குரிய முக்கிய காரணங்கள் கண்டறியப்படாமல் — தீர்க்கப்படாமல் அவை இருந்தவாறே இருக்க அதை ஒழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது வெற்றி பெறும் முயற்சியாக அமையாது.

அரசியல்வாதிகளின் நடத்தை இவ்வாறு அமைந்திருப்பதற்கு காரணங்கள் உள்ளன. எமது அரசியல்வாதிகள் தனிப்பட்ட ரீதியில் ஒரு கொள்கையையும் தாம் சார்ந்த அரசியல் கட்சி ரீதியில் பிறிதொரு கொள்கையையும் கடைப்பிடிக்கிறார்கள். அவர்கள் கடைப்பிடிக்கும் கொள்கையின்படி நாட்டின் முக்கியமான தேவைகள் முக்கியமற்ற இடத்தையே பெறுகின்றன. எனவே யுத்தத்திற்குத் தீர்வுகாண அரசியல் வாதிகளுக்கு அவகாசமில்லை.

மியுத்தத்திற்குத் தீர்வுகாணும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளாமல் இருப்பதும் இக்காரணத்தாலேயாகும்.

அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது இன்று முக்கிய தேவையாக அமைந்துள்ளது.

ஆனால் அரசியல்வாதிகள் இதை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு வேறு விடயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டுமா? எவ்வாறான அலகிற்கு அதிகாரம் பதிர்ந்தளிக்கப்படவேண்டும்? ஆகிய விடயங்களுக்கு முதலில் தீர்வு காணப்படவேண்டும்.

இந்த அதிகாரப் பகிர்வின் போது முஸ்லிம் மக்களுக்காக கிழக்கு மாகாணத்தில் தனியான ஒரு நிர்வாக அலகு உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏ.எச்.எம். அஷ்ரப்பால் முன்வைக்கப்பட்டுள்ளது. இதை நல்ல ஒரு கோரிக்கை அல்ல என்றே கூறவேண்டும். அஷ்ரப்பின் சொந்தப் பிரதேசம் கிழக்கு மாகாணமாக இருப்பதால் இந்த வேண்டுகோள் விடப்பட்டிருப்பினும் அது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றேயாகும்.

இந்நாட்டில் முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தில் மட்டுமல்ல, கண்டி, கொழும்பு, காலி போன்ற பிரதேசங்களிலும் பரந்து வாழ்கின்றனர். அவர்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்கிறார்கள் என்பதை மறந்து விடமுடியாது. எனவே முஸ்லிம் மக்களுக்கென கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் நிர்வாக அலகு ஒன்று தேவையெனக் கோருவதை தவறென்றே கூறுவேன்.

எவ்வாறாயினும் நிலவும் துர்ப்பாக்கிய நிலைமைக்கு முடிவுகாண்பதற்கு பேச்சுவார்த்தைகள் மூலம் யுத்தத்திற்குத் தீர்வுகாண வேண்டும். ஜனாதிபதி பிரேமதாசாவின் காலத்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகள் போல் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும் என்பது அதன் அர்த்தமல்ல. சரியான வழிமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தைகளைத்தவிர வேறு விதத்தில் தற்போதுள்ள நிலைமையை மாற்ற முடியாது. அவ்வாறான ஒரு செயற்பாட்டைத் தவிர்த்து உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதால் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இன்று உலக நடைமுறையாக அமைந்துள்ளது. இவ்வாறான அமைதி வழிமுறை காரணமாகவே பயங்கரவாதி என ஒருகாலத்தில் அழைக்கப்பட்ட யசீர் அரபாத்திற்கு வெள்ளை மாளிகையில் வரவேற்புக் கிடைத்தது.

தென் ஆபிரிக்காவில் நெல்சன் மண்டேலா 27 வருடம் சிறைவாசத்தை அனுபவித்த பின்னரும் அந்த நாட்டிலுள்ள வெள்ளை இன மக்களைத் தனது எதிரிகளாகக் கருதவில்லை.

இக்காரணத்தினாலேயே தென் ஆபிரிக்காவை கட்டியெழுப்ப அவரால் முடிந்தது. பொஸ்னியாவிலும் செச்சினியாவிலும் இடம் பெற்ற யுத்தத்திற்குபேச்சுவார்த்தைகள் மூலமே முடிவுகாணலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வினை எட்ட எங்களால் முடியாவிடின் மத்தியஸ்தர் ஒருவரை ஈடுபடுத்துவதுசாலப் பொருத்தமானதாகும்.

இந்தியா அல்லது பக்கச் சார்பற்ற ஒருதரப்புமத்தியஸ்தம் வகிப்பது எங்களுக்கு நல்லபலனை அளிக்கும் மத்தியஸ்தம் வகிப்பதற்கு ஒருநாட்டிற்குப் பதிலாக பல நாடுகளையும் ஈடுபடுத்தலாம்.

வெளிநாடு ஒன்றின் மத்தியஸ்த்தத்தை ஏற்கவில்லை எனில் அது அரசியல் வாதிகளின் தவறாகும். சரியான திசை குறித்து மக்களுக்கு அறிவு புகட்டுவது அவசியமாகும்.

பேரழிவுக்கு வழிவகுக்கும் இந்த யுத்தத்தை தொடர்ந்து நடத்த எங்களால் இயலாது. அதேபோல் எங்களுக்கு உரிமையும் இல்லை. எதிர்காலச் சந்ததியினருக்கு நாங்களே பொறுப்பானவர்கள். அந்தப் பொறுப்பை கவனத்தில் எடுக்காது செயற்பட எங்களுக்கு உரிமை உண்டா?

17 ஆண்டுகளாக ஆட்சி செய்த ஐ. தே. கட்சி மீது பழிபோடுவது இடம்பெற்று வரும் அழிவுகளுக்குத் தீர்வாக அமையாது. இந்த அரசுஆட்சிக்குத் வந்து மூன்று ஆண்டுகளாகின்றன. எனவே கடந்த ஆட்சி பற்றி குற்றஞ் சுமத்துவதுநியாயமானதல்ல, எனவே கடந்த கால நடவடிக்கைகள் பற்றி குற்றஞ் சுமத்துவதற்குப் பதிலாசு எதிர்காலம் பற்றி சிந்தித்து செயற்படுவது அரசின் கடமையாகும். ★

---

இன்று குருத்தோலை ஞாயிறு:

# தவக்காலத்தில் எமது உள்ளத்தை புதிய ஆலயமாக மாற்றுவோம்

இன்று குருத்தோலை ஞாயிறு. தவக்காலத்தின் உச்சக்கட்டமான ஆண்டவரின் பாஸ்கா மறை நிகழ்ச்சிகளைக் கொண்டாடும் பரிசுத்த வாரத்தில் இன்று அடி எடுத்து வைக்கிறோம்.

இயேசு தம்முடைய பாடுகள் — மரணம் — உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறை நிகழ்ச்சிகளைக் கொண்டாட ஜெருசலேமுக்கு வந்ததை இன்று நாம் நினைவு கூருகிறோம்.

இயேசுவின் வாழ்வில் நடந்த மகிமைமிக்க சம்பவம் இது. இதனை மாற்குவின்(11:1-10) நற்செய்தியில் நாம் படிக்கிறோம். இயேசு ஜெருசலேமை நெருங்கி வந்து விட்டார். இரண்டு சீடர்களை அழைக்கிறார். எதிரே இருக்கும் ஊருக்குள் போய் இதுவரை யாரும் ஏறாத கழுதைக் குட்டியைக் கொண்டு வாருங்கள் என்று தம் இறுதிப் பயணத்துக்கு ஆயத்தம் செய்கிறார். சீடர்கள் கழுதைக் குட்டியைக் கொண்டு வந்து தம் போர்வைகளை அதன்மேல் போட்டு இயேசுவை அமரச் செய்கிறார்கள். வேறு சிலர் வயல் வெளிகளில் இலை தளைகளை வெட்டி வழிகளில் பரப்பி ''தாவீதின் மகனுக்கு ஓசான்னா'' என்று ஆர்ப்பரித்துக் கொண்டு முன் செல்கிறார்கள்.

ஜெருசலேம் யூதர்களுக்கு மிக முக்கியமான இடம். அங்கிருக்கும் ஜெருசலேம் தேவாலயம், அவர்களை எப்போதும் இணைக்கும் இடமாக விளங்கியது. யூதர்கள் தம் பாஸ்கா கடமைகளை நிறைவேற்ற ஜெருசலேமுக்குப் போவது வழக்கம். இயேசு கூட பலமுறை போயிருக்கிறார். ஆனால் இம்முறை இயேசுவுக்கு இந்த ஜெருசலேம் பயணம் வித்தியாசமானது.

கால்நடையாகப் போகும் ஜெருசலேம் யாத்திரையை இயேசு கழுதை மீது நடத்துகிறார். குதிரை மீது ஏறிப் போர்வீரன் போலவோ அரசன் போலவோ போகவில்லை. கழுதை மீது ஏறி அமைதியாகப் போகிறார்.

யூதர்கள். பாஸ்கா விழாவைக் கொண்டாட ஜெருசலேமுக்குப் போவார்கள். அங்கு இயேசுவும் போய் இருக்கிறார். தன்னுடைய பாஸ்கா விழாவில், தன்னையே செம்மறியாக அர்ப்பணிக்கும் புதிய பாஸ்கா விழாவுக்குப் போகிறார்.

யூதர்கள் மெசியாவை நீண்டகாலம் எதிர்பார்த்திருந்தார்கள். மகிமையிலும் மாட்சிமையிலும் வரும் அரசனாக எதிர்பார்த்தார்கள். ஆனால் இயேசுவோ அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வரும் ஆன்மீக அரசராக குதிரைமேல் அல்ல கழுதைமேல் வருகிறார். அவரை ஏற்றுக்கொள்வது அவர்களுக்குக் கஷ்டமாகிறது.

ஒலிவமலைத் தோப்பு ஊடாகப் பவனி போகும் போது தான் மக்கள் கூட்டம் அங்கிருந்த ஒலிவ் மரக்கிளைகளை முறித்து வானை நோக்கி உயர்த்திப் பிடித்து மெதுவாக அசைத்தவர்களாக ஓசான்னா, ஓசான்னா என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

எங்களிடம் ஒலிவ் மரங்கள் இல்லை. நாம் தென்னங்குருத்துக்களை அசைத்துஓசான்னா ஓசான்னா என்று பாடிக் கொண்டு இயேசுவின் பாடுகள்— மரணம் — உயிர்ப்பு என்னும் பாஸ்கா விழாக் கொண்டாட்டங்களைத் தொடக்கிவைக்க எமது புதிய ''ஜெருசலேம்'' ஆலயத்தில் நுழைகிறோம். எமது உள்ள ஆலயத்தில் நுழைகிறோம்.

ஓசான்னா என்ற எபிரேயச் சொல்லுக்கு காப்பாற்றும் என்ற பொருள் ஆரம்பத்தில் கொடுக்கப்பட்டது. இப்போது வாழ்க— போற்றி, என்ற கருத்து கொடுக்கப் படுகிறது.

இந்தத் தவக்காலத்தில் எமது உள்ளம் புதிய ஆலயமாக ஆயத்தப்படுத்தப் பட்டுள்ளது. வாழ்க, ஓசான்னாஅரசேவாரும்,எமக்கும் எம்மண்ணுக்கும் சமாதானம் தாரும் என்று நாமும் பாடுவோம்.

அருட்திரு.
ரூபன் மரியாம்பிள்ளை

**தவக்காலச் சிந்தனை**
**40 ஆவது நாள்-ஞாயிறு**

## நெல்லைசேமிக்க கோரிக்கை

1997 — 98 கால போக நெற்செய்கைக்கான விதை நெல் இவ்வருடம் கொழும்பிலிருந்து கிடைக்கும் சாத்தியம் இல்லாததால் குறித்த காலப் பகுதிக்கான விதை நெல்லினை இம்முறை அறுவடையில் கிடைக்கும் நெல்லில் சேமித்து வைக்குமாறு நெற்செய்கையாளரை தென்மராட்சி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஐ-117)

## நாவாந்துறை அ. அட்டை விநியோகம்

சோனகதெரு தெற்கு பகுதி ஜே — 86 — கிராம சேவையாளர் பிரிவுக்குரிய விசேட அடையாள அட்டை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை9.00மணிக்கு, நாவாந்துறை பாதுகாப்புப் படை முகாமில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க செயற்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# நுணாவில் மத்தி கந்தசுவாமி [வைரவர்] ஆலய தேர்த் திருவிழா சிறப்புமலர்

23 – 03 – 1997

நல்லை ஆதீன முதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளின் அருளாசி

சிவநேயச் செல்வர்களே!

நுணாவில் மத்தியில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு கந்தசுவாமி கோயிலில் மகோற்சவம் நடைபெறுவது சிறப்புடையது. உற்சவம் என்பது இறைவனுடைய ஐந்து தொழில்களைக் குறிப்பதாகும். அவ்வகையில் தேர்த் திருவிழா சிறப்புடையதாகும். அடியவர்களுடைய ஆணவமலத்தை நீக்கி ஞான ஒளியை ஏற்றுவதனை அது குறிக்கிறது. இறைவனுடைய சிந்தனை மனித வாழ்க்கையைப் புனிதப்படுத்துவதாகும். இந் நிலையில் நுணாவில் மத்தி கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழா மனிதர்களை புனிதமாக்குவதாக அமையும். கலியுகவரதனாம் முருகப் பெருமான் தேரேறி அனைத்து மக்களுடைய துன்பங்களையும் நீக்க வேண்டுமென உளமாரப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு!

ஆலயத்தின் பிரதம குருக்கள்

## கிரியாகானகலாமணி சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களின் ஆசியுரை

சாவகச்சேரி நுணாவில் மத்தியில் கலியுக வரதனாம் கந்தப் பெருமான் வீற்றிருந்து அருள் பாலிக்கும் திருக்கோயிலில் இன்றைய பங்குனி உத்தர நன்னாளன்று தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. நான்காவது வருடமாக மகோற்சவம் நடைபெறும் இவ்வாலயத்தில் அருட்பெருந் திரு. காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் விசேடமாக எடுத்துச் சொல்லியுள்ள பஞ்சாயதன ஆலய வழிபாட்டுமுறை இயற்கையாக அமைந்துள்ளது.

அதற்கமையவே கலியுகவரதனாம் கந்தப்பெருமான், எந்தப்பெருமானை வணங்கினாலும் தாம் நாப்பண்ணிருந்து திருவருள் பாலிக்கிறார். முறையே வலது புறம் விநாயகர், இடது புறம் மகாவிஷ்ணு, கிழக்கு வாயிலில் மேற்கு நோக்கி தம்மையும் எம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர்

## திரு. சி. நடராசாவின் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்க, நுண்கலைகளும் செழித்தோங்கும் சாவகச்சேரி நுணாவில் மத்திப் பகுதியில் அமைந்த அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நான்காவது வருடமாக இன்று நிகழும் தேர்த் திருவிழாவிலே ஞானமே வடிவாய், அழகே உருவாய்த் திகழும் முருகப் பெருமான் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆலயம் சென்று வழிபடும் அடியவர்கள் ஆலய விழாவாக தேர் இழுப்பதை நமது உடம்பை ஒட்டிய வாழ்க்கைக்கு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். தேரில் இருப்பதுபோல் நமக்குள்ளும் இறைவனின் பிம்பம் இருக்கின்றது. தேரை இழுப்பது போல் ஆசாபாசங்கள் நம்மை இழுக்கின்றன. தேருக்கு முன்னால் செல்லும் இசையும் வாத்தியங்களும் போல நமது வாழ்க்கையிலும் பல்வேறு

(6 ஆம் பக்கம் பார்க்க)

இந்து இளைஞர் மன்றத்தினரின் சார்பில்

## தலைவர் ச. லோகேஸ்வரன் சிறப்புச் செய்தி

தென்மராட்சியில் சாவகச்சேரி நகரம் சைவமும், தமிழும், பண்பும், பக்தியும் சிறந்தோங்கும் பகுதி. அந்நகரத்தின் கண் அமைந்துள்ள நுணாவிற்பதியிலுள்ள எமது கந்தசுவாமி ஆலயம் பழம் பெருமையும் சிறப்பும் வாய்ந்த திருத்தலமாகும். இத்திருத்தலத்திலே இன்று நான்காவது வருடமாக சித்திரத்தேர் இறையருளால் வீதியுலாவருவதையிட்டு எமது மன்றம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

எமது மன்றம் ஆலய நிர்வாகத்துடனும் இப்பகுதி மக்களுடனும் ஒன்றிணைந்து, தனது கடமைகளை ஆற்றி வருகிறது. ஆலய ஒழுங்கு, புனிதம் என்பவற்றுக்கு நிர்வாகத்துக்கு பக்கபலமாக நின்று தம்மாலான உதவிகளை. இறைவனின் திருவருளுடனும் இவ்வூர் மக்களின் பூரண ஒத்துழைப்புடனும் தம் பங்கை ஆற்றிவருகிறது. மேலும் ஆலயத்தி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கந்தனுக்குத் தொண்டர்களாவோம்

யாழ். குடாநாட்டின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் புனித பூமியான தென்மராட்சிப் பதியில் சைவத்தின் வளர்ச்சிக்கும் சிறந்த பக்திக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது சாவகச்சேரி. ''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற ஔவையின் வாக்குக்கிணங்க, ''கோயில்கள் மட்டும் இருந்தால் போதாது; அவற்றின் புனிதத்தையும், சைவப் பாரம்பரியங்களையும் கட்டிக்காக்க வேண்டும்'' என்ற உறுதியுடன் வாழுபவர்கள் இவ்வூர் மக்கள். அப்பேர்ப்பட்ட நிலையில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் ஆலயங்களில் தனிச்சிறப்பு வாய்ந்த ஆலயமாக விளங்குவது நுணாவில் மத்தி வைரவர் கோயில் என வழங்கும் அருள் மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம்.

இங்கு முருகனுக்கு வலப் பக்கத்தில் விநாயகர், இடப் பக்கத்தில் மஹாவிஷ்ணு, வடக்கு நோக்கிய வண்ணம் வைரவப் பெருமான், மேற்கு நோக்கிய வண்ணம் அம்பிகை ஆகியோர் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற காட்சிகளானது எந்த ஆலயத்துக்குமே இல்லாத ஒரு தனிச் சிறப்பைக் காட்டி நிற்கிறது.

இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஆலயம் நுணாவில் கிழக்கு கிராதியடி ஞானவைரவர் என்ற



பெயரோடு சிறு குடிலாக வெள்ளிக்கிழமை தோறும் விளக்கு வைத்து வணங்கும் ஆலயமாக இருந்தது. அதற்கு இப்பகுதி மக்கள் பொங்கல் பூசைகள் செய்து வழிபடும் வழமையும் இருந்தது. இவ்வாலயத்தைச் சேர்ந்த நிலபுலங்கள் நுணாவில் கிழக்கில் கத்தாப்பு மரத்தடி என்னும் பகுதியில் பரம்பரையாக வாழ்ந்து வந்த அந்தணர் குலத்தவருக்குச் சொந்தமாக இருந்தது. இதனால் அப்பகுதி வாழ் அந்தணர்கள் வைரவர் கோயிலில் விளக்கு வைத்து வணங்கியும் விசேடகாலங்களில் பொங்கல் பூசைகள் செய்து வழிபட்டும் வந்தார்கள்.

இப்படிப் பூசித்து வந்த அந்தணர் பரம்பரையில் வந்த ஸ்ரீ சந்தன ஐயர் காலத்திலே இவ்வாலயம் கணிசமான வளர்ச்சியை எட்டியிருந்தது. சந்தன ஐயர் காலத்தில் இவருக்கோ அல்லது இவர் குலத்தில் வழிவந்தவருக்கான ஒருவருக்கோ இறைவன் கனவில் அருள் பாலித்தார்; தற்பொழுது ஸ்ரீ முருகன் ஆலயம் அமைந்துள்ள இடத்தில் ஞானசக்தியாகிய வேலுடன் வயோதிபர் ஒருவர் உட்கார்ந்திருக்கக் கனவு கண்டார்கள். அதன் பயனாகவே முருகனுக்கு அவ்விடத்தில் ஓர் ஆலயம் உருவாக்கப்பட்டதாக எமது ஆலய வரலாறு கூறுகிறது.

அதேபோன்று அவர் காலத்தின் பின்னர் ஆலயப்

(6 ஆம் பக்கம் பார்க்க)


## முருகன் தாள் பணிவோம்

ஆடவர், மங்கையர், சிறார்களுக்கான ஆடைத் தெரிவுக்கு
**கல்பனாஸ் புடைவையகம்**
இல. 16, நவீனசந்தை உட்புறம், சாவகச்சேரி.

கந்தனருள் பாலிக்கத் தேரில் வரும் இன்னாளில் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள வைபவங்களைப் படம் பிடித்திட
**ஜெயா ஆட் போட்டோ**
கண்டி வீதி, சாவகச்சேரி.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
**கீதா நகைமாடம்**
இல. 12, நவீனசந்தை, சாவகச்சேரி.

நங்கையர் நாடும் தங்கமாளிகை
**வதனி நகைமாடம்**
இல. 41, டச்சுவீதி, சாவகச்சேரி,
கிளை: கண்டி வீதி, கொடிகாமம்.

நவீன டிசைன்களில் நகைகளை உடன் பெற்றுக்கொள்ள
**இந்திரன் ஜுவலர்ஸ்**
இல. 10, நவீனசந்தை, சாவகச்சேரி.

கந்தனின் ரதோற்சவ நன்னாளில் உங்கள் ஜவுளித் தெரிவுகளுக்கு நினைவில் வைத்திருங்கள்
**வாணி புடைவையகம்**
இல. 11, நவீனசந்தை உட்புறம், சாவகச்சேரி.

மயிலேறும் கந்தா ரதம் ஏறிவந்து அருள் பாலித்திடு மாறிவரும் நாகரிக ஆடை வகைகளை உடனுக்குடன் பெற்றிட
**மகாநதி புடைவையகம்**
இல. 04, நவீனசந்தை, சாவகச்சேரி.

சகலவிதமான அழகுசாதனப் பொருள்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
**லிங்கம்ஸ் பென்ஸி கவுஸ்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

சகலவிதமான கோயில் பொருள்களையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**ஓம் சரவணா**
கண்டி வீதி, சாவகச்சேரி.

சகலவிதமான கிருமிநாசனிகள், உரவகைகள், கால்நடைத் தீவங்கள்
**முருகன் களஞ்சியம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

நுணாவில் கந்தனின் தேர் திருவிழா சிறப்புற வாழ்த்துகிறோம்
சகல விதமான மளிகைப் பொருள்களையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள
**சன்றைஸ் றேடேர்ஸ்**
இல. 6, கச்சாய் வீதி, சாவகச்சேரி.


இம்மலரை வெளியிட நிதி உதவி அளித்த ஏனைய வர்த்தகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மலர் ஆக்கம்: ச. தியானேஸ்வரசர்மா


நுணாவில் மத்தி கந்தசுவாமி (வைரவர்) ஆலய
**தேர்த்திருவிழா சிறப்புற இறைஞ்சுகிறோம்**

தென்மராட்சியில்
() பலசரக்குச் சாமான்கள் () பால்மாவகைகள் () பிஸ்கட், சவர்க்கார வகைகள் யாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்:
**ஸ்ரீ விக்னேஸ்வரா ஸ்ரோர்ஸ்**
(பலசரக்கு மாளிகை)
கண்டி வீதி, (சி/363) சாவகச்சேரி.

ஆலயத்தின் தென்வீதியில் அமைந்துள்ள
**சரஸ்வதி கல்வி நிலையம்**
மென்மேலும் கல்வியில் சிறப்புற கந்தனின் அருளை வேண்டுகிறோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுணாவில் மத்தி கந்தசுவாமி(வைரவர்)ஆலய
### சிறப்பு மலர்த் தொடர்ச்சி

# கந்தனுக்குத் தொண்டர்களாவோம்...

பூசைகள் நடத்தி வந்த ஸ்ரீ மார்க்கண்டேய ஐயர் காலத்தில் பெரியவர்களின் பக்தி மேலீட்டால் தெய்வ தரிசனங்கள் கிடைக்கப்பெற்று தற்போது அம்பாள் இருக்கும் இடத்தில் ஒரு பூரண கும்பத்துடன் ஒரு வயோதிப அம்மையார் வீற்றிருந்த காட்சியைக் கண்டார். அதைத் தொடர்ந்து அவ்விடத்தில் ஓர் ஆலயம் அம்பாளுக்கு அமைத்து நித்தியம் பூரண கும்பம் வைத்து அம்பாளை வழிபட்டு வந்தார்கள். வைரவப் பொங்கல் செய்யும் அடியார்கள் அம்பிகையையும் மறப்பதில்லை.

மேற்கூறிய சந்தன ஐயர் அவர்களின் புதல்வரான சபாரத்தின ஐயர் அவர்களின் பெரும் முயற்சியின் பயனாக இவ்வாலயம் சிறிது சிறிதாக முன்னேறிக் கொண்டிருந்தது அதன் பின்னர் அவரது பிள்ளைகளில் மூத்தவரான நாகேஸ்வர ஐயர் அவர்களின் பொறுப்பில் இவ்வாலயம் மீண்டும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

நாகேஸ்வர ஐயர் அவர்கள் பெரிய குடும்பஸ்தரெனினும், யாவும் இறைவன் பாரமே என்கின்ற ஒரே நோக்குடையவர். அவரது அயராத முயற்சியின் காரணமாக தனது கஷ்ட நிலையிலும் இவ்வாலயத்தை மென்மேலும் முன்னேற்றி வைத்தார். கண்டி கதிரேசன் ஆலயத்தில் முருகனைப் பக்தியோடு வழிபட்டு அவன்பால் வந்த தர்மப்பொருள்களைக் கொண்டு நுணாவிலூர் முருகன் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்யத் தொடங்கினார். என்றோ தமது மூதாதையர் தொடக்கி வைத்த பணியைத் தாம் செய்ய வேண்டும் என்ற திருவருள் உந்த, வடக்கு வாயிலாக இருந்த முருகனையும் பிள்ளையாரையும் கிழக்கு நோக்கிய சிறந்த ஆலயமாக அமைத்தார். ஆலயத்துக்கு 1962 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 22 ஆம் திகதி அத்த நட்சத்திரத்தன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின்னர் நாகேஸ்வர ஐயரின் இறுதிக்காலமான 72 ஆம் ஆண்டுக்குள் அம்பாள் ஆலயம், வைரவர் ஆலயம் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகமும் நடைபெற்றது. அக்காலகட்டத்திலே தான் பங்குனி மாத அத்த நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு அலங்கார உற்சவமும் நடைபெற்று வந்தது.

மகோற்சவம் நடைபெறுவதைத் தன் கண்களால் காணாது போனாலும் அதை ஒரு கனவாகவே கொண்டிருந்த நாகேஸ்வர ஐயர் அவர்களின் காலமும் அப்படியே கழிந்தது.

நாகேஸ்வர ஐயரது காலத்துக்குப் பின்னர், அவரது மூத்த புதல்வர்இராமச்சந்திர ஐயர் அவர்கள் ஆலய பரிபாலனசபைப் பொறுப்பை ஏற்று சிரத்தையுடன் ஆலயத் திருப்பணிகளை நடத்தி வந்தார். இவரது காலத்தில் ஆலயம் புதுமைப் பொலிவோடுவிளங்கியது. தந்தையின் கனவை நனவாக்கிக் கொண்டார். 1989 இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.இக்கால கட்டத்தில் நுணாவிலூர் மக்கள் தாமாகவே முன்வந்து பெரும் நிதியைத் திரட்டி வெள்ளிக் கலசத்தினாலான கொடித்தம்பம், சித்திரத்தேர் என்பவற்றை உருவாக்கினர். இம் மக்களும் கூட தமது ஆலயத்தில் ஒரு மகோற்சவப் பெருவிழாவைக்காண்பதில் நீண்ட காலமாகவே அவாக்கொண்டு நின்றார்கள். அதற்காகத் தாமே ஒரு திருப்பணிச் சபையை அமைத்து அல்லும் பகலும் பாடுபட்டு இப் பணிகளைச்செவ்வனே நிறைவேற்றினர்.

### சித்திரத் தேர்

1994இல் புதிய சித்திரத் தேர்வடிவமைக்கப்பட்டுவெள்ளோட்டமும், இரதோற்சவமும் நடைபெற்றன. 1995இல் கொடியேற்றத் திருவிழா முதன் முறையாக நடைபெற்று, தொடர்ந்தும் எதுவித இடையூறும் இன்றி இவ்வாண்டும் நடைபெறக் கந்தனின் திருவருள் கூடிநிற்கிறது.

ஆலயத்திற்கு புதிய சித்திரத்தேரையும், கொடித்தம்பத்தையும் அமைப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, அனைத்துப் பணிகளுக்கும் தொடர்ந்தும் தம்மை அர்ப்பணித்துவரும் அடியார்கள், மற்றும் நுணாவிலூர் மக்கள் அனைவருக்கும் நுணாவில் கந்தன் தொடர்ந்தும் அருள் பாலித்துக்கொண்டேயிருப்பான்.

எமது மூதாதையினரின் கடின உழைப்பினால் உருவாக்கப்பட்ட இவ்வாலயத்தில், அவர்கள் கண்ட கனவு நனவாவதையிட்டுப் பூரிப்படைகின்றோம். இந்தப்பணிகளை நிறைவு செய்ய வாய்ப்புத்தந்த கலியுக வரதனாம் கந்தப் பெருமானுக்கு என்றுமே நாம் தொண்டர்களாக இருந்து பணிவிடை செய்வோம். இன்று கலை அழகுடன் மிளிரும் கந்தனின் இந்தச் சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகிவிட்டன. நான்காவது தடவையாக அந்த அழகு ரதம் வீதி உலா வரும் காட்சியைக் காண ஆவலாக இருந்தோம். ஏனெனில், நாட்டுச் சூழ்நிலைகள் எம்மை ஏக்கத்தில் மூழ்க வைத்தன.

கலியுகக் கடவுளாம் கந்தனின் திருவருளால் அவன் தனது ஆலயத்துக்கோ எமது ஊர் மக்களுக்கோ எந்த விதமான அழிவுகளும் ஏற்பட விடாமல் தடுத்து விட்டான். இன்று எமது ஆலய வீதியில் சித்திரத் தேரில் உலாவரும் கந்தன் எமது ஊர் மக்களது துயரை மட்டுமல்ல, உலக மக்களின் துன்ப துயரங்களையும் துடைப்பானாக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

### தலைவர் ச.லோகேஸ்வரன்..

லேயே மக்களின் ஒத்துழைப்போடு சமய, தமிழ் வளர்ச்சிக்கு உதவக் கூடிய வகையில் ஒரு சிறு நூல் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலத்திலும் இதுபோன்ற ஆலய, சமூகப் பணிகளுக்கு எம்மாலான உதவிகள் அனைத்தையும் இறையருளோடு, ஆலய நிர்வாகமும் நுணாவிலூர் மக்களும் தொடர்ந்து வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம். இன்றைய நன்னாளில் கந்தக் கடவுள் தேரில் எழுந்தருளி எம்மக்கள் குறைகளைப் போக்கி அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்வைத்தர வேண்டுமென அவன் பாதார விந்தங்களைப் பணிகின்றோம்.

### திரு. சி. நடராசாவின்...

குடும்பப் பண்டிகைகளும், விழாக்களும் நடைபெறுகின்றன. ஊர்வலம் முடிந்ததும் சுவாமி திரும்பவும் ஆலயத்துள் போய்விடுகிறார். வாழ்க்கை முடிந்ததும் நமது ஆத்மாவும் அதுவரைவாழ்ந்த உடலைவிட்டு இறைவனிடம் திரும்பி விடுகின்றது. இவ்வாறு பகவான் பாபா தேர்த் திருவிழாவுக்கு விளக்கமளிக்கின்றார்.

மெய் அடியார்களின் குறை தீர்க்க தேரேறி வரும் கந்தப் பெருமானிடம் மனமுருகி அடியார்கள் செய்யும் வேண்டுதல்கள் எவ்வளவோ உள. அவற்றை எல்லாப் கந்தப் பெருமான் கருணையுடன் அணுகி நிறைவேற்றுவார்.

இவ்வாலயத்தின் தொண்டுகள் சிறக்க ஆலய வளர்ச்சிக்கு மெய்யடியார்கள் தம்மால் ஆவன செய்து இறை பணியில் திளைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

### கி. சோமசுந்தரக்...

மையும் பரிபாலிக்கும் அம்பிகை, அதற்கு நடுவண்ணாக நவக்கிரக நாயகர்கள், இவர்கள் எல்லோரையும் அடியார்களையும் பரிபாலித்துக் கொண்டு ஷேத்திரபாலர் எனும் நாமத்தோடு வீற்றிருந்தருளும் வைரவப் பெருமான் ஆகிய தெய்வ மூர்த்தங்கள் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார்கள்.

இவ்வாலயத்தில் நான்காவது வருடமாக மகோற்சவம் நடைபெறுகிறது. இவ்வாலயம் தொன்று தொட்டு அந்தணப் பெருமக்களால் நிர்வகித்து நல்ல முறையில் நடந்து வருகிறது. எனினும் நுணாவிலூர் மக்களின் ஒத்துழைப்பு, திருப்பணி, பக்தி என்பனவற்றோடு மேலோங்கி வளர்ந்தும் வருகின்றது. அத்துடன் ஆலயத்தோடு ஒன்றிணைந்து செயற்படும் இந்து இளைஞர் மன்றத்தின் பணி ஆலயத்தின் புனிதம் ஒழுங்கு கட்டுப்பாடு என்பனவற்றை நன்றாக அமைத்துப் பணி புரிகின்றது.

இந்து இளைஞர் மன்றத் தலைவரும் ஆலய அர்ச்சகர் வழித் தோன்றலுமான அயராது உழைக்கும் பிரமஸ்ரீ லோகேஸ்வரசர்மாவின் தெய்வீகப் பணி மிகவும் சிறப்புடையது.

இத்துணைத் தெய்வீகச் சிறப்புடன் வளர்ந்து மேலோங்கும் நுணாவில் மத்தி அருள்மிகு கந்தசுவாமி கோயில் தேர்த் திருவிழாவுக்கு வருகைதரும் பக்தர்கள், அடியார்கள் பெரும் பேறு பெற்றவர்கள்.

அனைத்து மக்களும் முருகன் திருவருள் பெற்றுச் சகல செல்வ போக மிக்க பெரு வாழ்வு வாழ்வார்களாக!

வாழ்க சைவ மக்கள்! வளர்க சைவநெறி!

## முதல் முடிவு

கடுகண்ணாவை நகர சபைத் தேர்தல் முடிவே நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

நள்ளிரவு 12.05 மணி அளவில் இந்த முடிவு வெளியானது.

ஐ. தே. க கடுகண்ணாவை நகரசபைத் தேர்தலில் வெற்றிபெற்றது. (இ-3)

## பல்கலைக்கழக ஊழியர் கைது!

திருகோணமலையில் இருந்து கப்பல் மூலம் ஊடை செய்யப்பட்ட பொருள்களை எடுத்து வர முயன்றதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் ஒருவர் திருகோணமலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில்கப்பல் ஏறுவதற்கு முன்னர் இவர் சோதனை செய்யப்பட்ட போது, இவரிடம் இருந்து 78 பென் ரோச் பற்றறிகள், 3 டோச் பற்றறிகள், ஒரு தொகை சைக்கிள் போல்ஸ் பெயரிங், ஒரு பைக்கெட் கற்பூரம், பிளாஸ்டிக் றோல் ஆகியன இருந்ததாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். இருவரும் துறைமுகப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)


யாழ்ப்பாணம் வரை செல்கின்றீர்களா?

இன்று முதல் நல்லூரில்

★ அலங்காரப் பொருள்கள் ★ அன்பளிப்புக்கள்
★ சொக்லேற்ஸ் ★ பிஸ்கட்ஸ்
★ சைக்கிள் உதிரிப்பாகங்கள் ★ காகிதாதிகள்
ஆகியவற்றுக்கு:

சந்தியா மல்ரி கோட்யாட்

531, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

(45950)


## முதலாவது
## பிறந்தநாள் வாழ்த்து




★ செல்வன் லகிலன் ★

புலோலி தெற்கைச் சேர்ந்த
**கிறிஸ்ரி பன்னீர்ச்செல்வம் மரியராணி**
தம்பதிகளின் கனிஷ்ட புதல்வன் லகிலன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (23-03-1997) தனதில்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை பெற்றோர், அக்கா ரஜிதா, அண்ணா சகிலன், பேரன்மார், பேர்த்திமார், மாமன்மார், அத்தைமார், சித்தப்பாமார், சித்திமார், டென்மார்க் சித்தப்பா, சித்தி, அக்கா சாருஜி, சுருதி, மச்சாள் பெற்றீனா, ஞானப்பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் இறைவன் அருள் பெற்று நலமுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

'தாய் இல்லம்',
புலோலி தெற்கு,
புலோலி.

(45920)

## முதலாம் ஆண்டு நினைவுச்சிமிழ்



| மண்மகிழ: | கண்நெகிழ: |
|---|---|
| 06 | 03 |
| — | — |
| 01 | 04 |
| — | — |
| 1911 | 1996 |

திருமதி
### வேலுப்பிள்ளை அபிராமிப்பிள்ளை

**திதி:- 25 - 03 - 1997**

ஆண்டொன்று அகன்றதுவோ
அன்னையே உமையிழந்து.
பூண்டதுயர் மாறாமற்
புலம்பியழல் காணீரோ ?
நீண்டு வரும் நினைவுகளால்
நிம்மதியை நாமிழந்து
வேண்டித் தொழுகின்றோம்
வேலவன் தாள் அமைதி கொள்வீர்.

ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்!

- குடும்பத்தவர்

'' இலங்கா வாசா ''
கண்டி வீதி,
மீசாலை.

(45882)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். சிவதொண்டன் நிலையத்தில் யோகர் சுவாமி சிலை நிறுவப்பட்டது

திருநெல்வேலி, மார்ச் 23 தவத்திரு. யோகர் சுவாமிகளின் திருவுருவச் சிலை கடந்த வியாழன் யாழ். நகரிலுள்ள ''சிவதொண்டன்'' நிலையத்தில் உரிய முறையில் நிறுவப்பட்டது.

சுவாமிகள் சமாதியடைந்த பங்குனி ஆயிலிய நட்சத்திர தினமான அன்று காலை தொடக்கம் சிவதொண்டன் நிலையத்தில் அவரின் நேரடியான கடாட்சத்தைப் பெற்ற பெரியோர்கள் உட்படப் பெரும் எண்ணிக்கையானவர்கள் கூடியிருந்தனர்.

முற்பகல் 8-30 மணிக்கு மங்கல வாத்தியங்கள் ஒலிக்க சுவாமிகளின் திருவுருவச் சிலை நிறுவப்பட்டது.

மூன்று குருமார்களின் உதவியுடன் சிவஸ்ரீ நாராயணக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கிரியைகளை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து திருவடி அபிசேகமும், குருபூசையும் இடம் பெற்றது. பிரபல நாதஸ்வர வித்துவான் பத்மநாதன் குழுவினரின் மங்கள இசை இந்த நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டியது. இறுதியாக மகேஸ்வர பூசை இடம்பெற்றது.

சிவதொண்டன் நிலைய நிர்வாகிகள் இந்த நிகழ்ச்சியை மிகவும் சிறந்த முறையில் நடத்த சகல ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

பஞ்சலோகத்தில் உருவாக்கப்பட்ட சுவாமிகளின் சிலை தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டது. மட்டக்களப்பு செங்கலடியிலுள்ள ''சிவதொண்டன்'' நிலையப் பொறுப்பாளர் சுவாமி அ. செல்லத்துரையின் பெருமுயற்சியினால் சிலை இங்கு கொண்டுவரப்பட்டது.

(ஐ-135)

# பாவவினை நீக்கும் பங்குனி உத்தரம்

சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் சிவ விரதங்களில் பங்குனி உத்தரமும் மிகச் சிறப்பு வாய்ந்ததாகும். பங்குனி உத்தர விரதத்தைக் கைக்கொண்டு நற்பேற்றினை அடைந்தோர் எண்ணிலடங்கார்.

நாம் செய்த பாவ வினை நீங்கிப் பரிசுத்தம் அடைய இவ்விரதம் வழி கோலுகின்றது.

பங்குனி மாதத்தில் வருகின்ற உத்தர நட்சத்திரத்தில் பௌர்ணமியும் வரும் நாளில் பங்குனி உத்தரமானது சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. சந்திரன் உத்தர நட்சத்திரத்தில் இருப்பதால் இந்த விழாவுக்கு இப்பெயர் வந்தது. இதைக் 'கல்யாண விரதம்' எனவும் அழைப்பார்கள்.

பங்குனி உத்தரம் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களையும் ஆன்மாக்களின் பொருட்டு புரிபவராகிய பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதமாகும்.

புராண இதிகாசங்களில் இதன் விசேடம் குறிப்பிடக் கூடியனவாக வரலாற்றுப் பெருமையுடன் ஆங்காங்கே திகழ்கின்றன. இந்நாளில் தான் முருகன்- தெய்வானை திருமணம்,ஸ்ரீஇராமர் - சீதை திருமணம், சுந்தரேஸ்வரர் - மீனாட்சி திருமணம், ஆண்டாள் - திருமால் திருமணம் முதலாயின நிகழ்ந்துள்ளன. மேலும் இப்பங்குனி உத்தர நன்னாளில் தான் சாம்பராகிப்போன மன்மதனைச் சிவபிரான் மீண்டும் எழுப்பி ரதியின் கண்களுக்கு மாத்திரம் தெரியும் அநங்கன் ஆக மாற்றியருளினார். அத்துடன் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் பிறந்த தினமும் இதுவாகும்.

பங்குனி உத்தரத்தன்று திருச்செந்தூரில் ஆண்டுதோறும் பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண உற்சவமும் அன்று தான் நடைபெறுகிறது. சபரிமலையில் பக்தர்கள் ஐயப்ப சுவாமியை பங்குனி உத்தரத்தன்று காவடி கரகம் எடுத்து வழிபடுவர்.

இந்த விரதத்தை 48 ஆண்டுகள் தொடர்ந்து அனுட்டித்து வந்தால் அடுத்த பிறவி தெய்வீகத்தன்மை வாய்ந்ததாக அமையும். பிறவிப்பிணி தீர்ந்து பகை அகலும். திருமகள் இவ்விரதத்தைக் கைக் கொண்டு விஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேறு பெற்றாள். இந்திரன் இந்திராணியைப் பெற்றதும் பிரம்மன் சரஸ்வதியைப் பெற்றதும் இவ்விரதத்தினாலேயே.

இந்நன்னாளில் புண்ணிய நதிகளில் அல்லது ஆலயங்களில் உள்ள தீர்த்தக் கேணிகளில் நீராடி பக்த அடியார்களுக்கு நீர்மோர், நீர்க்கஞ்சி முதலியவற்றை வழங்கி பசி தாகம் என்பவற்றை நீக்கினால் புண்ணியப் பேறு கிடைக்கும் என்பது ஆன்றோர் கருத்தாகும்.

சைவ மக்கள் அனைவரும் வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த சிவபிரானை இந்த பங்குனி உத்தர நன்னாளில் விரதமிருந்து வழிபாடியற்றி ஆன்ம ஈடேற்றம் பெறுவார்களாக. ★

- இராசையா ஸ்ரீதரன்.

# யாழ். நூல் நிலைய புனரமைப்பு: ஜனாதிபதி தலைமையில் கூட்டம்

யாழ்ப்பாண நூல் நிலைய புனரமைப்புத் திட்டம் தொடர்பான அங்குரார்ப்பண நிகழ்ச்சி அடுத்த மாதம் 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

புனரமைக்கப்படவிருக்கும் யாழ். நூல் நிலையக் கட்டடத்தின் மாதிரி ஒன்றையும் ஜனாதிபதி அப்போது திரை நீக்கம் செய்து வைப்பார்.

1981ஆம் ஆண்டு மாவட்ட சபைத் தேர்தலின் போது யாழ். நூல்நிலையம் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

(இ-10)

## ஊர்காவலர்கள் இருவர் பலி

திருகோணமலை மாவட்டம், மொறவேவாவில் நேற்று முன்தினம் நண்பகல் 11. 00 மணியளவில் மொறவேவா பொலீஸ் நிலையத்திலிருந்து சென்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இந்தமோதலில் இரு ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். ஓர் ஊர்காவல் படை வீரர் காயமடைந்தார்.

புலிகள் தரப்பிலும் அதிக எண்ணிக்கையானோர் இறந்திருக்கக் கூடும் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-4)


## தேவை

புடைவை வியாபாரம் செய்யக்கூடிய ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் தேவை. தமிழில் பில் எழுதக் கூடியவராகவும் இருக்க வேண்டும். நேரில் வரவும்.

த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்
21, மக்கள் நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(9403)


## பயண அனுமதிக்கு காத்திருக்கும் நெடுந்தீவு வாசிகள்

கொழும்புக்குச் செல்வதற்காகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துவிட்டு நெடுந்தீவைச் சேர்ந்த சுமார் 25 பேர் காத்திருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்தமூன்றுமாதங்களுக்கு முன்னரே நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில்தமது பெயர்களை இவர்கள் பதிவுசெய்துள்ளனர்.எனினும் இதுவரைகப்பல்பயணத்திற்கான அனுமதி அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-111)

## ஜே-74 பிரிவு அ. அட்டைகள்

ஜே/74 யாழ்நகர் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகளை நேற்றைய தினம் பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் தமது அடையாள அட்டைகளை இன்று காலை 8.00 மணிக்கு சின்னக்கடை பாதுகாப்பு முகாமில் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## புதிய கப்பல்

திருகோணமலையில் இருந்து வடக்கே பயணிகளை ஏற்றிவர ''மிஷன்'' என்னும் புதிய கப்பல் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

நேற்று முதல்முறையாகத் தனது பயணத்தை திருமலையில் ஆரம்பித்த இக்கப்பலை புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையால் வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளது.

500 பயணிகளை ஏற்றி வரக் கூடிய வசதிகொண்ட இக்கப்பல் சிங்கப்பூரைச் சேர்ந்ததாகும்.

(ஐ-3-150)


உ
ஸ்ரீ அம்பாள் துணை



## திருமண அழைப்பு



அன்புடையீர்!

நிகழும் ஸ்வஸ்த்தி ஸ்ரீ மங்களகரமான தாது வருஷம் பங்குனித்திங்கள் 11 ஆம் நாள் (24-03-1997) திங்கட்கிழமை அன்று முற்பகல் 09-26 முதல் 10-40 வரை உள்ள இடப இலக்கின சுபமுகூர்த்த வேளையில் காஞ்சிப்பெரியவர் ஸ்ரீகாமகோடிபீடாதிபதிகளினதும் சர்வதேச இந்துமத பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. நா. சோமாஸ்கந்த சிவாச்சாரியார்களினதும் நல்லாசிகளுடன் அன்னை ஸ்ரீ மீனாட்சி - வாராஹி அம்பாள் திருவருள் துணைகளுடன்,

மணமகன்
கொக்குவில் மேற்கு ஸ்ரீ வாராஹி அம்பாள் தேவஸ்தானம்
கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்காதேவி தேவஸ்தானம்
ஆகியவற்றின் பிரதம சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. க. குகதாஸக்குருக்கள் தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
**மதிவதன சர்மா**
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
அவர்களுக்கும்



மணமகள்
யாழ். கல்வியங்காடு நல்லூர்,
ஸ்ரீ சட்டநாத சிவன் தேவஸ்தானம்
ஆதீன குரு பரம்பரையைச் சேர்ந்த
சிவஸ்ரீ. கு. சபாரெத்தின குமாரக்குருக்கள் தம்பதிகளின்
(கமலபூஷணக் குருக்கள்)
ஏகபுத்திரி
**மரகதவல்லி**
(இராமநாதன் நுண்கலைப் பீடம்)
அவர்களுக்கும்

கன்னிகாதான பாணிக்கிரகண மாங்கல்யதாரணம் செய்து வைப்பதற்கு நிச்சயித்திருப்பதால் அச்சமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் வேண்டுகிறோம்

சமாவர்த்தனம் 24-03-1997 தாது வருஷம் பங்குனி 11 ஆம் நாள் காலை 7-30 மணி முதல் 9-00 மணி வரை.
(வீரபத்திரர் தேவஸ்தானம் - கல்வியங்காடு.)

மாங்கல்ய தாரணம் 24-03-1997 தாது வருஷம் பங்குனி 11 ஆம் நாள் காலை 9-26 மணி முதல் 10-40 மணி வரை
மணமகள் இல்லம் கல்வியங்காடு.

வதுவாகிரகப் பிரவேசம்:
மணமக்கள்: வரவேற்பு உபசாரம், அதே தினம் - பிற்பகல் 2-30 மணிக்கு மேல் மணமகன் இல்லம் ஆனைக்கோட்டை.
இவ்வண்ணம் இரு வீட்டார் அழைப்பு

வரவேற்பாளர்கள்:

மணமகன் பெற்றோர்:
சிவஸ்ரீ. க. குகதாஸக்குருக்கள் தம்பதிகள் உயரப்புலம், ஆனைக்கோட்டை
பிரமஸ்ரீ ந. அகிலேஸ்வர சர்மா புஷ்பகலா தம்பதிகள் மொறிஷியஸ்
பிரம்மஸ்ரீ கு. சசிசேகரசர்மா குகநந்தினி தம்பதிகள் பிரான்ஸ்
பிரம்மஸ்ரீ கி. பங்குசசர்மா ஜெயஷீலா தம்பதிகள் சஞ்ஜீவி மருந்தகம், ஸ்ரேசன்றோட், சுன்னாகம்.
பிரம்மஸ்ரீ ஞா. சீதாராம கிருஷ்ணசர்மா தம்பதிகள் [illegible] சுபமங்களம்

மணமகள் பெற்றோர்:
சிவஸ்ரீ, கு. சபாரெத்தினகுமார குருக்கள் தம்பதிகள்
ஆறுமுகம் வீதி, 3ஆம் கட்டை, கல்வியங்காடு.
மணமகளின் மற்றும் உறவினர்கள்.

(9420)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

K.D.K., National மேசை விசிறிகள், சிங்கர் குளிர்சாதனப் பெட்டிகள், வீட்டுத்தளபாடங்கள். விற்பனைக்குண்டு. V. A. வரதராசா, தொல்புரம் மேற்கு, சுழிபுரம். [45935]

நல்ல இன தென்னம்பிள்ளைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு தொடர்பு: நா. சந்திரா, கரும்புத்தோட்டம், தலையாழி, கொக்குவில். (45940)

### இறைச்சிக் கோழி

நல்ல முறையில் பராமரிக்கப்பட்ட புறோயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு-: இல. 101, பலாலி வீதி, (இலுப்பையடிச் சந்தி அருகாமை) யாழ்ப்பாணம். (45937)

இறைச்சிக்கோழி (புறோயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; 154, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம். குறிப்பு; காலை 8.30 மணிவரை இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். (9409)

இறைச்சிக் கோழி (புறோயிலர்), பேடு (கல்பேட்) விற்பனைக்குண்டு. தொடர்பு:- 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (45931)

### மணமக்கள் தேவை

தங்களுக்குத் தேவையான மணமக்களை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ குடும்ப மரபுடன் தெரிவுக்கு காலையில் மட்டும் நேரில் வருபவருக்கு விரைவில் பலனுண்டு. உள்ளூர் மணமக்களுக்கு இலவச சேவை. முத்துக்குமாரு செல்லப்பா புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (45930)

கௌரவ குடும்பத்து வசதியுள்ள பட்டதாரி ஆசிரியைகளுக்கு (சகோதரர் வெளிநாடு) உள்ளூரில் ஏதாவது தொழிலுள்ள அல்லது வெளியூர் மணமகன்கள் தேவை. உள்ளூர் மணமகனுக்கு சேவை இலவசம் முத்துக்குமாரு செல்லப்பா, புன்னாலைக் கட்டுவன். (45929)

### நூலாலயம்

'நூலகம் அறிவின் தாயகம்' ஈழத்து - தமிழகப் படைப்பாளிகளின் புதிய வெளியீடுகளை வாசித்துப் பயனடைய விஜயம் செய்யுங்கள் லிங்க் லெண்டிங் லைப்ராறி Ling Lending Library, சாவகச்சேரி. (45932)

### ஆங்கிலப் பரீட்சைகள்

O/L 97 ஆண்டு 9, 10 உட்பட தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடையவும், Spoken English கணிதம் இரு மாதங்களிலும் அனுபவமுள்ள London Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி (9413)

### மணப்பெண் தேவை

இந்து, கௌரவ குடும்பம், யாழ்ப்பாணம், ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்சமயம் பிரான்சில் வசிக்கும் 38 வயதுடைய மணமகனுக்கு 28—33 வயதிற்கிடைப்பட்ட மணப் பெண் தேவை. ஓரளவு சீதனம் எதிர்பார்க்கப்படும். தொடர்பு:- A ராஜா 74, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். [45934]

### வீடு தேவை

திருநெல்வேலி சந்திக்கும், யாழ். போதனா வைத்தியசாலைக்கும் இடையில் மருத்துவபீட மாணவர்களுக்கு வாடகைக்கு வீடு தேவை. மின்சார வசதியுடன் விரும்பத்தக்கது. தொடர்பு: இல. 65, மணல்தரை லேன், சிவன் கோயிலடி, திருநெல்வேலி. (9407)

### தேவை

நல்ல பாவனையிலுள்ள வெஸ்பா(Scooter)தொடர்பு வே. நடராசா சட்டத்தரணி 96, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (9418)

மாதச் சம்பளம் ரூபா 7000/- பெறும் தனிநபருக்கு, வாழ்க்கைத்துணை தேவை. வயது 47-க்கு மேற்பட்டவர்கள் கடித மூலம் விண்ணப்பிக்கலாம். கடிதத்தொடர்பு: இல. 599 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [45915]

### மணமகன் தேவை

யாழ். இந்து வேளாளர் உதவி வைத்திய அதிகாரியாகக் கடமை புரியும் (A M. O) 29 வயது 5' 3'' உயரமுடைய, அழகிய, கார்த்திகை 3-ம் பாதம் குற்றமற்ற பெண்ணுக்கு இலங்கையில் அரச, கூட்டுத்தாபன வங்கித்துறையில் கடமையாற்றும். தகுந்த மணமகனைத்தேடுகிறார்கள். முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். வி. இல. 600 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (45948)

## 11-வது ஆண்டு நினைவஞ்சலி



மக்கள் எழுத்தாளர்
கே. டானியல்

தோற்றம்:- 15 - 04 - 1927
மறைவு:- 23 - 03 - 1986

சமூகத்தின் மா கொடிய நோயான தீண்டாமைக்கெதிராக தன் இலக்கியப் படைப்புகளையும், வாழ்வையும் அர்ப்பணித்தவர்.

என்றும் நீங்காத நினைவுகளில்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

76/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (45947)

## MASTER SCALE SERVICE

( Authorized Govt. Licence Holders )

## மாஸ்டர் ஸ்கேல் சேவிஸ்

(அரசாங்க அங்கீகாரம் பெற்றவர்கள்)

**அலுவலகமும் தொழிற்சாலையும்:**
200, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**தலைமையலுவலகம்:**
19/B, விகாரமாவத்தை, கொலன்னாவ, வெள்ளம்பிட்டிய.

சகல அளவு கருவிகள் விநியோகிப்பவர்கள்; திருத்துபவர்கள்.

— மேடைத்தராசு
— மேசைத்தராசு
— மணிக்கூட்டுத்தராசு
— துலாத்தராசு
— படிவகைகள்
— மீற்றர் கோல்கள்
— லீற்றர் அளவைகள்
— ஏனைய வகைகள்

★ அளவு கருவிகள் யாவும் சீர்செய்து முத்திரையிட்டுக் கொடுக்கப்படும். (45918)

## நினைவு அஞ்சலி

திருமதி
## வேலுப்பிள்ளை அபிராமிப்பிள்ளை

சங்க உறுப்பினர்
திருமதி லங்காதேவி மனோகரன் அவர்களின்
அன்புத் தாயார்

**திருமதி வேலுப்பிள்ளை அபிராமிப்பிள்ளை**

அவர்கள் கடந்த 03 - 04 - 1996 இல் இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் முதலாம் ஆண்டு தினத்தை நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா சாந்தி அடைய எமது சங்கத்தின் சார்பாக பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்.**

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. (சி/359)

## Institute of Business & Professiounal Studies

## C·I·M·A·
### Stage I

**வகுப்புக்கள் சித்திரை '97 இல் ஆரம்பம்:**

முகாமைத்துவ கணக்காளர்களுக்கான பட்டய நிறுவனத்தின் (இலண்டன்) நவம்பர் மாதப் பரீட்சைக்கான தயாரிப்பு

★ பதிவு செய்வதற்கான வழிகாட்டல் ★
★ மாதாந்த கருத்தரங்கு ★
★ தொழில்சார் அதிஉயர் தராதரமுள்ளோரின் விரிவுரைகள் ★

தேவையான ஆகக்குறைந்த கல்வித்தராதரம்
க. பொ. த (உயர்தரம்) இரண்டு பாடங்களில் சித்தியுடன்
க. பொ. த (சாதாரணம்) கணிதம் மற்றும் ஆங்கிலத்துடன் கூடிய மூன்று திறமைச் சித்திகள்.

அறிமுக தொடர்பிற்கும், உறுப்பினராகச் சேர்வதற்கும் 29 - 03 - 97 சனிக்கிழமை காலை 9 00 மணிக்கு சமுகம் தரவும்.

இடம்:- கொடிகாமம் வீதி, நெல்லியடி.
(திருஇருதய கல்லூரி முன்பாக)

(45873) **இயக்குநர்.**

உ

## இன்று யாழ். நகரில்
## மங்களகரமான திறப்பு விழா

★ மாயவன் கலைக்கோயில் ★
இல. 241, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

★ ஜெகன் வீடியோ சென்ரர் ★
இல, பருத்தித்துறை வீதி, கல்வியன்காடு, யாழ்ப்பாணம்.

மேற்படி இரு நிறுவனங்களும் இன்று (23-03-97) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு

**கலையுலகச் சிந்தனைச் சிற்பிகள்**

திரு. பெ. சுப்பிரமணியம் (மணியம் ஆட்ஸ்)
திரு. சுப்பிரமணியம் (ரமணி ஆட்ஸ்)
திரு. கே. இராசரத்தினம் (பேபி போட்டோ)

ஆகியோரால் மங்களகரமாகத் திறந்து வைக்கப்படும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆர். எம். நித்தியானந்தம் (ஆனந்தன்)
கே. எஸ். குமார் (சாந்தன்)**

— உரிமையாளர்கள்

(45949)

## BASF

## யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!

ஜேர்மனியின் **BASF** நிறுவனத்தின் விவசாய இரசாயனங்களான

குமுலுஸ் டி எவ்
பேர்Fவெக்தியோன்
தயோடான்
பீFன்பொஸ்
பொலிராம்

மற்றும் புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த
டெஸிஸ்

தற்பொழுது கொழும்பிலிருந்து புதிதாக தருவிக்கப்பட்டு குடாநாட்டின் சகல விவசாய இரசாயன விற்பனை நிலையங்களிலும் விற்பனையாகின்றன.

**விநியோகஸ்தர்:**

## FARMERS STORES

(கமக்காரர் மாளிகை)

சுன்னாகம் கிளை: திருநெல்வேலி

**BASF - FINLAY (PVT.) LTD.**
186, VAUXHALL STREET, COLOMBO - 2

பீடை கொல்லிகள் அபாயகரமானவை, அவதானமாகப் பாவியுங்கள். (சி-257)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்

உதயன்

## ஐயகோ பணமே!

யாழ்ப்பாணத்தின் எதிர்காலச் சமூகத்தின் நல்வாழ்வில் அக்கறையுள்ள சமூகாபிமானிகள் பலரையும் புதிய கவலை ஒன்று வாட்டத் தொடங்கியுள்ளது.

சமூகத்தைச் சீரழிக்கவல்ல மதுபான விற்பனையைப் பெருக்கவும், புதிது புதிதாக சூதாட்டம், களியாட்டங்களை அறிமுகப்படுத்தவும் சில தரப்புகளில் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

அந்தத் தகவல்களே தமிழர் சமுதாயம் சீரழிந்து விடக் கூடாது என்பதில் உண்மையாக அக்கறையுள்ள சமூக அபிமானிகளை மனம் நொந்து போக வைத்துள்ளன.

மதுபான விற்பனை ஏற்கனவே குடாநாட்டில் தாராளமயமாக்கப்பட்டு விட்டது. இதனால் எதிர்காலச் சமூகத்தினரான பாடசாலை மாணவர்களுக்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்கும் அது இலகுவில் எந்தவித தடங்கலுமின்றி எட்டுகிறது.

எந்தவழியிலும் பணத்தைத் தேடிக்கொள்ளுவது தான் வாழ்க்கை. தர்ம அதர்மங்களைப் பற்றியோ, சமூக நலன் சமூக விரோதம் குறித்தோ, பாவ புண்ணியம் பற்றியோ எவ்வித அக்கறையும் இல்லாத பெருங் கூட்டம் எம்மிடையே உண்டு.

அடுத்தவன் ஒரு தொழிலைச் செய்து பணம் சம்பாதிக்கின்றான் என்று அறிந்தால், அது எந்த மட்டரகமானாலும் பரவாயில்லை; அதே தொழிலைத் தாமும் செய்து பணம் ஈட்டிவிட வேண்டும் என்பதே மேற்கூறிய கூட்டத்தின் ஒரே நோக்கமாகி விட்டது.

வேறு எதனையும் பொருட்படுத்துவதில்லை. பணம் என்ற பிணத்தை வாழ்நாள் முழுவதும் தழுவிக் கொண்டிருந்தால் நிரந்தர 'பேரின்பம்' கிடைத்து விடும் என்று நினைக்கும் கூட்டம் அது.

அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே வெளி நாட்டுக் குடிவகைகள், சூதாட்ட விளையாட்டுக்கள், குடித்துக் கும்மாளம் அடிக்கும் 'கிளப்'புகளை, புதிது புதிதாக ஆரம்பிக்கத் திட்டமிட்டு அதற்கான தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது தகவல்.

கோடி கோடியாகப் பணத்தைக் குவித்து வைத்திருக்கும் பெரும் புள்ளிகள் கூட, சமூகத்தை நாசமாக்க வல்ல மேற்கூறிய புதிய கீழ்த்தரமான தொழில்களில் ஈடுபட நான் முந்தி, நீ முந்தி என்று முண்டியடிக்கின்றனராம்.

பணத்தை — வாழ்க்கைக்குத் தேவையான நிதியை — இப்படித் தான் தர்மவழியில் உழைக்க வேண்டும் என்ற நன்னெறிகள் மறக்கப்பட்டு விட்டன. பணத்தை எப்படியும் உழைத்தால் என்ன, யார் கேட்பது என்று நினைக்கும் கூட்டமே இப்போது பெருகி வருகிறது.

உலக வாழ்வும், உடைமைகளும் நிரந்தரம் அற்றவை என்பதனை மறந்தவர்களாக பணத்தின் மீது பற்று வைத்து சமூகத்தைச் சீரழிக்க முற்படுகின்றார்கள். தாம் பணம் சம்பாதிப்பதற்காக சமூக ஒழுக்கத்துக்கும் நலத்துக்கும் விலை பேசுகிறார்கள்.

பணம் பத்தும் செய்யும் என்பதால் இவர்களின் பாவச் செயலை — இளந் தமிழரை நாசமாக்கும் அதர்மத்தை — எவராலும் தடுக்க முடியாதா? கடவுள் தண்டனை கொடுக்கும் வரை எவராலும் மாற்ற முடியாதா?

ஐயகோ, பணமே!

---

### கேகாலை நகரசபை
★ பொ. ஐ. மு. — 3589
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 3323
வாக்கு — 4 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 393
வாக்கு—ஒரு உறுப்பினர்

### வத்தேகம நகரசபை
★ பொ. ஐ. மு.— 2464
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 1885
வாக்கு — 3 உறுப்பினர்

### சிலாபம் நகரசபை
★ ஐ. தே. க. — 5755
வாக்கு — 7 உறுப்பினர்
★ பொ. ஐ. மு. — 4424
வாக்கு — 4 உறுப்பினர்

### பேருவல நகரசபை
★ பொ. ஐ. மு. — 6407
வாக்கு — 5 உறுப்பினர்
★ ஐ. தே. க. —6046
வாக்கு — 3 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு1—1567
வாக்கு — 1 உறுப்பினர்

### பாணந்துறை நகரசபை
★ பொ. ஐ. மு. — 8394
வாக்கு — 5 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 6039
வாக்கு — 3 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு— 1235
வாக்கு — 1 உறுப்பினர்

### வென்னப்புவ நகர சபை
★ பொ. ஐ. மு. — 34050
வாக்கு — 14 உறுப்பினர்
★ ஐ. தே. க — 22633
வாக்கு — 8 உறுப்பினர்

### சியம்பலாண்டுவபிரதேசசபை
★ பொ. ஐ. மு. —9567
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஐ. தே. க — 7040
வாக்கு — 4 உறுப்பினர்

### குளியாப்பிட்டி பிரதேசசபை
★ ஐ. தே. க — 23678
வாக்கு — 11 உறுப்பினர்
★ பொ. ஐ. மு. — 23233
வாக்கு — 9 உறுப்பினர்
★ சுயேச்சைக் குழு 1— — 3088
வாக்கு — 1 உறுப்பினர்
★ ஜே.வி.பி. — 2056
வாக்கு —1 உறுப்பினர்

### மாவத்துகம பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 17565
வாக்கு — 9 உறுப்பினர்
★ ஐ.தே.க. — 9372
வாக்கு — 4 உறுப்பினர்

### நிக்கவரெட்டிய பிரதேசசபை
★ பொ. ஐ. மு — 19084
வாக்கு — 11 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 12212
வாக்கு — 6 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு —1558
வாக்கு — 1 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 1230
வாக்கு 1 உறுப்பினர்

### வாரியப் பொல பிரதேசசபை
★ பொ. ஐ. மு. — 21234
வாக்கு — 12 உறுப்பினர்
★ ஐ. தே. க — 17298
வாக்கு — 8 உறுப்பினர்.
★ ஜே. வி. பி. — 2064
வாக்கு — ஒரு உறுப்பினர்

### பண்டாரகம பிரதேசசபை
★ பொ.ஐ.மு. — 33104
வாக்கு — 11 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 23786
வாக்கு 6 உறுப்பினர்
★ ம. ஐ. மு. — 2754
வாக்கு — 1 உறுப்பினர்

### வெலிகேபொல பிரதேசசபை
★ பொ. ஐ. மு. — 11817
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 11108
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 622

### புத்தளம் நகரசபை
★ பொ. ஐ. மு. — 5249
வாக்கு — 5 உறுப்பினர்
★ ஐ தே. க. — 3848
வாக்கு — 2 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு1—1304
வாக்கு — 1 உறுப்பினர்
★ சுயேச்சைக் குழு — 3 — 1150 வாக்கு - 1 உறுப்பினர்

### அநுராதபுரம் நகரசபை
★ பொ. ஐ. மு. — 10271
— வாக்கு — 7 உறுப்பினர்
★ஐ. தே. க. — 7742
வாக்கு — 4 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 999
வாக்கு

### வெலிகம பிரதேசசபை
★ பொ. ஐ. மு. — 23690
வாக்கு — 13 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 14836
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 3309
வாக்கு — 2 உறுப்பினர்

### ஹாலி எல பிரதேச சபை
★ ஐ. தே. க — 17105
வாக்கு — 11 உறுப்பினர்
★ பொ. ஐ. மு. — 15978
வாக்கு — 8 உறுப்பினர்
★ ஜே வி. பி — 1537
வாக்கு — 2 உறுப்பினர்
★ மலையக ம. மு. — 886
வாக்கு — 1 உறுப்பினர்
★ ம. ஐ. மு. — 698
வாக்கு

### மத்துகம பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 16524
வாக்கு — 10 உறுப்பினர்
★ ஐ தே. க. — 12922
வாக்கு — 6 உறுப்பினர்
★ ம. ஐ. மு. — 1249
வாக்கு — ஒரு உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 1943
வாக்கு — ஒரு உறுப்பினர்

### வலப்பனை பிரதேச சபை
★ பொ. ஐ. மு. — 21962
வாக்கு — 12 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 21689
வாக்கு — 9 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 1427
வாக்கு — 1 உறுப்பினர்

### சீதாவாக்க நகர சபை
★ ஐ. தே. க — 4896
வாக்கு — 7 உறுப்பினர்
★ பொ. ஐ. மு. — 3403
வாக்கு — 3 உறுப்பினர்
★ ஜே. வி. பி. 1103
வாக்கு — 1 உறுப்பினர்

### அப்புத்தளை பிரதேச சபை
★ ஐ. தே. க. — 8119
வாக்கு — 7 உறுப்பினர்
★ பொ. ஐ. மு. — 7571
வாக்கு — 4 உறுப்பினர்

### களுத்துறை நகர சபை
★ பொ. ஐ. மு. — 7567
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 7348
வாக்கு — 4 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு —1958
வாக்கு — ஒரு உறுப்பினர்

### பண்டுகஸ்நுவர பிரதேசசபை
★ பொ. ஐ. மு. — 22122
வாக்கு — 12 உறுப்பினர்
★ ஐ.தே.க.— 16953
வாக்கு — 8 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு — 1 — 1257 வாக்கு. — 1 உறுப்பினர்

## மாநகர சபைகளில்.....

### கொழும்பு மாநகரசபை
★ ஐ தே. க. — 1,20278
வாக்கு — 27 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு — 5 — 95272 வாக்கு — 19 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 8133
வாக்கு — 2 உறுப்பினர்
★ ம. ஐ. மு. — 5570
வாக்கு — 1 உறுப்பினர்
★ சுயேச்சை — 2 — 4498
வாக்கு 1 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு 3 — 2947 வாக்கு — 1 உறுப்பினர்
★ ந. ச. ச. க — 2911
வாக்கு. 1 உறுப்பினர்.
★ சுயேச்சை 1 — 2153
வாக்கு — 1 உறுப்பினர்
★ மு. ஐ. வி. மு. — 2119
வாக்கு
★ சுயேச்சை — 4 — 1920
வாக்கு
★ ரெலோ — 1275 வாக்கு
★ சுயேச்சை — 6 — 926
வாக்கு

### ஜெயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை
★ பொ. ஐ. மு. — 24491
வாக்கு— 11 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 17651
வாக்கு — 7 உறுப்பினர்
★ ம ஐ. மு. — 2901
வாக்கு 1 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 2050
வாக்கு — 1 உறுப்பினர்

### காலி மாநகர சபை
★ பொ.ஐ. மு— 19205
வாக்கு — 10 உறுப்பினர்
★ ஐ. தே. க. — 17571
வாக்கு — 7 உறுப்பினர்
★ ஜே வி. பி. — 1698
வாக்கு — 1 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு — 1 — 22 வாக்கு

### தெஹிவளை - கல்கிசை மாநகரசபை
★ பொ. ஐ. மு. — 47481
வாக்கு — 15 உறுப்பினர்
★ ஐ. தே. க. —30791
வாக்கு — 10 உறுப்பினர்
★ ஜே. வி. பி. — 4672
வாக்கு — 3 உறுப்பினர்
★ சுயேச்சைக் குழு — 1 — 4156 வாக்கு— 1 உறுப்பினர்
★ ம. ஐ மு. — 3135
வாக்கு— 1 உறுப்பினர்.
★ சுயேச்சைச்குழு — 2 — 656 வாக்கு

### நீர்கொழும்பு மாநகரசபை
★ பொ. ஐ மு. — 33456
வாக்கு— 12 உறுப்பினர்
★ ஐ தே. க. — 22922
வாக்கு — 10 உறுப்பினர்
★ ந. ச. ச. க = 1201
வாக்கு
★ ஜே வி. பி. — 638.
வாக்கு

### கண்டி மாநகர சபை
★ ஐ. தே. க — 22405
வாக்கு — 13 உறுப்பினர்
★ பொ. ஐ. மு — 21795
வாக்கு — 10 உறுப்பினர்
★ ம. ஐ. மு— 984 வாக்கு — 1 உறுப்பினர்.

### மாத்தறை மாநகர சபை
★ பொ. ஐ. மு — 8233
வாக்கு — 7 உறுப்பினர்.
★ ஐ. தே. க — 6388 —
வாக்கு —4 உறுப்பினர்.
★ சுயேச்சைக்குழு — 2104
வாக்கு — 2 உறுப்பினர்.
★ ஜே. வி. பி—369 வாக்கு

### குருநாகல் மாநகர சபை
★ ஐ. தே. க — 5757
வாக்கு — 7 உறுப்பினர்
★ பொ. ஐ. மு — 4914 —
வாக்கு —5 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு — 1 328 வாக்கு
★ ஜே வி.பி= 240 வாக்கு
★ பூமி புத்திர கட்சி — 105 வாக்கு
★ ம. ஐ. மு — 91 வாக்கு

### நுவரெலியா மாநகர 'சபை
★ ஐ. தே. க — 5801
வாக்கு — 6 உறுப்பினர்
★ பொ. ஐ. மு — 4273
வாக்கு —3 உறுப்பினர்
★ சுயேச்சைக்குழு — 1 — 1603 வாக்கு 1 உறுப்பினர்
★ மலையக ம. மு — 340
வாக்கு
★ ஜே.வி.பி— 189 வாக்கு

### மொறட்டுவ மாநகர சபை
★ பொ. ஐ. மு. — 37826
வாக்கு — 15 உறுப்பினர்
★ ஐ. தே. க — 31664
வாக்கு — 11 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 4137
வாக்கு —2 உறுப்பினர்
★ ம. ஐ மு —2936 வாக்கு — ஒரு உறுப்பினர்

### பதுளை மாநகர சபை
★ ஐ. தே க—8387 வாக்கு — 8 உறுப்பினர்
★ பொ. ஐ. மு — 8138
வாக்கு — 6 உறுப்பினர்
★ ஜே. வி. பி — 759 வாக்கு ஒரு உறுப்பினர்
★ ம. ஐ. மு — 510 வாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.தெற்கு பிரதேச செயலக அ. அட்டை

வலிகாமம் தெற்கு, மார்ச் 23

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தில் பின்வரும் திகதிகளில் குறிப்பிடப்பட்ட கிராமசேவையாளர் பிரிவில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மார்ச் 22 ஏழாலை தென் மேற்கு (யா/202)

மார்ச் 25 ஏழாலை மத்தி (யா/206)
ஏழாலை தெற்கு (யா/203)

மார்ச் 26 உடுவில் தென் மேற்கு (யா/182)
சுன்னாகம் மத்தி (யா/198)
தாவடி கிழக்கு (யா/193)
ஏழாலை மேற்கு (யா/201)

மார்ச் 27 ஏழாலை வடக்கு (யா/205) ஈவினை — புன்னாலைக் கட்டுவன்(யா/209)

மார்ச் 31 குப்பிளான் தெற்கு (யா/210) உடுவில் மத்தி (யா/184) (இ-152)

### நாளை

**பங்குனி 11**
திங்கட்கிழமை

திதி: பூரணை
முற்பகல் 10.44வரை.
நட்சத்திரம்: உத்தரம்.
முற்பகல் 11.00வரை
சுபநேரம்: 12.16-01.46
ராகுகாலம்: 07.46-09.16
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சமய நிகழ்வுகளில்

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மணவாளக்கோலவிழா இன்று நடைபெறுகிறது. முருகமூர்த்திக்கு 1008 சங்காபிஷேகமும், பரிவார மூர்த்திகளுக்கு ஸ்நபன அபிஷேகமும் இடம்பெறும். (ஐ-173)

★ ★ ★

துன்னாலை மத்தி கோவிற்கடவைப் பிள்ளையார் கோயில் பங்குனி உத்தர உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-173)

★ ★ ★

சரவணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோயில் சம்புரோஷண கும்பாபிஷேக நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை மிருத்சங்கிரகணம் அங்குரார்ப்பண வைபவமும், யாக ஆரம்பமும் இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு எண்ணெய் சாத்துதல் நடைபெறும். (ஐ)

★ ★ ★

உரும்பராய் வடக்கு பேய்ச்சி அம்மன் கோயிலில் பங்குனி உத்தரத்தை ஒட்டி இன்று பிற்பகல் 3 மணி முதல் விசேட அபிசேகமும், கூட்டுப் பிரார்த்தனையும் இடம் பெறும். (ஐ-154)

★ ★ ★

பங்குனி உத்தரத்தை முன்னிட்டு சோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் இன்று 1009 சங்காபிஷேகமும் விசேட பூசை வழிபாடுகளும் காலை முதல் நடைபெறவுள்ளன. (ஐ-30)

★ ★ ★

நல்லூர் சிவன் கோயிலில் பங்குனி உத்தரத்தை ஒட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு விசேட அபிஷேகமும். பூஜையும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி அம்மன் -- ஐயனார் ஆலயத்தில் இன்று மாலை 4.30 மணிக்கு பூரணை தின திருவிளக்கு சுமங்கலி பூசைகள் இடம்பெறவுள்ளன. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு புங்கங்குளம் ஸ்ரீ வில்வையம்பதி நாகபூஷணி அம்மன் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும். (ஐ-30)

# உள்ளூராட்சி தேர்தல் முடிவு
# இ.தொ.காவுக்கு பின்னடைவு

கொழும்பு, மார்ச் 23

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸூம் பெரும் பின்னடைவைச் சந்தித்திருப்பதாக அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட இ. தொ. காவினால் மலையகப் பகுதியில் ஒரேயொரு உள்ளூராட்சிச் சபையைக் கூடக் கைப்பற்ற முடியவில்லை.

இ. தொ. காவுக்கு அதிக செல்வாக்கு மிக்க பகுதியாகக் கருதப்பட்ட நுவரெலியா மாவட்டம் அம்பகமுவ பிரதேச சபை அதிகாரத்தைக் கூட இ. தொ. கா. ஐக்கிய தேசியக் கட்சியிடம் இழந்து விட்டது. இச்சபையில் இ. தொ. கா 19 ஆயிரத்து 85 வாக்குகளைப் பெற்று 6 ஆசனங்களையே கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு 12 இடங்கள் கிடைத்தன. மலையக மக்கள் முன்னணியும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் தலா 2 இடங்களைப் பிடித்தன.

இது தவிர ஹட்டன் — டிக்கோயா நகரசபை உட்பட மலையகத்தில் உள்ளூராட்சி சபைகளில் இ. தொ. கா. மேலும் ஒரு சில ஆசனங்களை மட்டும் கைப்பற்றியிருக்கிறது.

கடந்த காலத் தேர்தல்களில் மிகுந்த வாக்கு வங்கிப் பலத்துடன் விளங்கிய அமைச்சர் தொண்டமானின் சக்தி ஒரு வகையில் கலங்கிப் போயுள்ளது என்றும் —

கட்சி மாற்றம் மற்றும் தலைமைத்துவக் குழறுபடிகள் இ. தொ. காவின் மீது மக்களுக்கு இருந்த அரசியல் விசுவாசத்தைக் குறைத்து விட்டன என்றும் பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டனர். (ஐ)


## பிறந்த தின வாழ்த்து

(23 - 03 - 97)

இன்று 10 ஆவது அகவையை நிறைவு செய்யும் எமது அன்புமிக்க ஏக புத்திரியான

### செல்வி அன்னலிங்கம் நர்த்திகா

(மாணவி, யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

சீரும் சிறப்பும் பெற்று கல்வியில் மேன்மையுற்று நலமுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா அதிபர்,
(யா/ கொ. து. ம. வி.)
உறவினர், நண்பர்கள்.

இல. 44, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (45941)



உ

தேவிமயம்

வியாபாரிமூலை

பழவத்தை

## காளி கோயில்
## மஹா
## கும்பாபிஷேகம்



இன்று (23-03-97) ஞாயிறு காலை 9.15 மணி தொடக்கம் 10.45 மணி வரையிலுள்ள சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

பிரம்மஸ்ரீ - தானு - வாசுதேவக் குருக்கள்
(கானப்பிரியன்)
ஆத்திசூடி விநாயகர் ஆலயப் பிரதம குரு,
கந்தர்மடம்.

பிரம்மஸ்ரீ - ச. இராமநாதக் குருக்கள்
கரணவாய்

பிரம்மஸ்ரீ - நா. தாமோதரக் குருக்கள்
நீராவியடி

பிரம்மஸ்ரீ - வே. சிவராமசர்மா
நவிண்டில்

ஆகிய குருமார்கள் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்கள்.

சுபமஸ்த்து

இவ்வண்ணம்
அம்பிகை அருள்வழி
நடக்கும்
தர்மகர்த்தா

(45877)



## இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்
## சிமெந்து விநியோகம்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெந்திற்கு நிகரான தரத்தினையுடைய இறக்குமதி செய்யப்பட்ட DIAMOND - 525 R ரக சிமெந்து எம்மிடம் விற்பனைக்குண்டு. சிமெந்து பெற விரும்புவோர் கீழ்வரும் முகவரியில் உள்ள எமது விற்பனை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

சிமெந்தினை யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியில் எமது காரியாலயத்துடன் இணைந்துள்ள களஞ்சியத்தில் அல்லது இல. 165, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள எமது களஞ்சியத்தில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

சிமெந்து பைக்கற் ஒன்றின் விலை ரூ. 530/-
(ரூபா ஐந்நூற்று முப்பது மட்டும்)

பொறுப்பதிகாரி,
யாழ். காரியாலயம்,
இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம்.

65, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (C/337)


## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்)

சபைக்கு பொதுமக்கள் ஐக் முன்னணியின் ஆதரவுடன் முன்னாள் மேயர் கணேசலிங்கம் தலைமையில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு — 5 மொத்தம் 90 ஆயிரத்து 272 வாக்குகளைப் பெற்று 19 ஆசனங்களையே கைப்பற்றியது.

ஜே. வி. பிக்கு இரண்டு ஆசனங்களும், மக்கள் ஐக்கிய முன்னணி, நவசமசமாஜக் கட்சி, சுயேச்சைக் குழு - 1, சுயேச்சைக் குழு — 2, சுயேச்சைக்குழு மூன்று ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின .

கொழும்பு மாநகர சபையில் போட்டியிட்ட தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) ஆயிரத்து 275 வாக்குகளை மட்டுமே பெற்றது. ஆசனங்கள் எதனையும் அக்கட்சி பெறவில்லை.

நீண்டகாலமாக கொழும்பு மாநகர சபையை ஐக்கிய தேசியக் கட்சியே தனது அதிகாரத்தின் கீழ் தக்க வைத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## 3 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்)

யையும் அக்கட்சியால் கைப்பற்ற முடியாது போய்விட்டாலும் மொத்தம் 2 லட்சத்து 58 ஆயிரத்து 545 வாக்குகளை — 3. 7 சதவீத வாக்குகளை — அக்கட்சி பெற்றுள்ளது.

கொழும்பு மாநகர சபையில் ஜே. வி. பிக்கு இரு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

தேர்தலில் போட்டியிட்ட மக்கள் ஐக்கிய முன்னணி மற்றும் நவசமசமாஜக் கட்சி ஆகியவற்றைவிட ஜே. வி. பி முன்னணிக்கு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மக்கள் ஐக்கிய முன்னணிக்கு இந்தத் தேர்தல் படுதோல்வியாகவே உள்ளது. மொத்தம் ஒரு லட்சத்து 4 ஆயிரத்து 951 வாக்குகளையே 1.5 சதவீத வாக்குகளையே — இக்கட்சி பெற்றுள்ளது.

நவசமசமாஜக் கட்சிக்கு [illegible] ஆயிரத்து [illegible] வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. (ஐ-5)

## 5 லட்சம் வாக்குகள் நிராகரிப்பு

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் அளிக்கப்பட்ட சுமார் 5 லட்சத்து 41 ஆயிரம் வாக்குகள் பல்வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ- 5)

## அமைச்சரவை...

(1 ஆம் பக்கத் தொடர்)

கிய வட்டாரங்களில் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையில் இருந்து வெளியேற்றப்படும் பட்சத்தில், அவரை மேல்மாகாண முதலமைச்சராக்க ஐ. தே. க. முயற்சி எடுத்துள்ளதாகவும் —

இது தொடர்பாக ஐ. தே. கவின் சிரேஷ்ட பிரமுகர்கள் அவருடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் பேசியுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

மேல்மாகாண சபையில் உள்ள ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்களையும் தம்முடன் சேர்த்து மேல்மாகாண சபை மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்து அதைத் தோற்கடிக்க ஐ. தே. க. முயற்சி எடுப்பதாகத் தெரிகிறது(இ-3-150)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கரனும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

கூட்டத்தில் கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

✶ யாழ். மாவட்ட இராணுவ அதிகாரியை சந்தித்து காணாமற் போனோர் தொடர்பாக விளக்கல்.

★ ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு பிரச்சினையை எடுத்துக் கூறல்.

★ தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளல்.

காணாமற் போனோர் தொடர்பாக ஆட்கொணர்வு மனுக்களைத் தாக்கல் செய்தல். (இ-3)

## 194 உள்ளூராட்சி...

(முதலாம் பககத் தொடர்)

டுவ, நீர்கொழும்பு, தெஹிவளை— கல்கிசை ஆகிய ஏழு மாநகரசபைகளிலும்—

பெலியகொட, அம்பலாங்கொட, வெலிகம, கேகாலை, வத்தேகம, அனுராதபுரம், மொறவேவ, களுத்துறை, பாணந்துறை, பேருவளை, கம்பஹா, ஹொரணை, பலாங்கொடை, மாத்தறை, ஜா—எல, நாவலப்பிட்டியா, கட்டுநாயக்கா, சீதுவ ஆகிய நகர சபைகளிலும் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பெரும்பானமைபெற்று வெற்றியீட்டியது. (இ-5)

## இன்றும் பலிக்களம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

திருமறைக் கலா மன்றத்தினரின் ''பலிக்களம்'' இசை உரை நாடகம் இன்று இரண்டாவது நாளாக 'மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

நாடகத்தைப் பார்த்தபின்னர் மக்கள் வீடு திரும்புவதற்காக இன்று மட்டும் யாழ். நகரப்பகுதியின் குறிப்பிட்ட சில பகுதிளில் மட்டும் ஊரடங்கு இரவு 9 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

இதற்கான அனுமதியை 512 ஆவது பிறிகேட் வழங்கி உள்ளது. (அ)

## எம். பிக்கு ஏற்பட்ட அனுபவம்

கொழும்பு மார்ச் 23

கண்டி மாவட்ட ஐ. தே. கட்சி. எம். பியான அப்துல் காதர் தமது மனைவியுடன் வாக்களிக்க கனங்காபுர மகா வித்தியாலயத்துக்கு வந்தார்.

ஆனால் அவரின் வாக்கு ஏற்கனவே பாவிக்கப்பட்டு விட்டதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்த அவர் தாம் இப்போது தான் வாக்களிக்க வருவதாகத் தெரிவித்தார்.

எனினும் அவர் வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. (இ-3-10)

## ஆளுங்கட்சி வசம்...

(முதலாம் பக்கத் தொடர்)

77 சதவீதமானோரே வாக்களித்தனர்.

அளிக்கப்பட்ட வாக்குகளில் பொ. ஐ. மு. 48.97 சதவீதத்தையும், ஐ. தே. க. 41.25 சதவீதத்தையும் பெற்றன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இரண்டரை வருட செயற்பாடுகளை மதிப்பீடு செய்யும் தேர்தலாக உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மேலெழுந்த வாரியாகத் தெரிகிறது என்றும் நோக்கர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இத்தேர்தலில் ஜே. வி. பிக்குக் கிடைத்த ஆதரவு குறிப்பிடும்படியாக உள்ளது. மொத்தம் நூறு பேர் உள்ளூராட்சி அமைப்புகளுக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தற்போது நாட்டில் நிலவும் முதலாளித்துவ அரசியல் கட்டமைப்பில் மூன்றாவது சத்தியாக இராமல் அதற்குப் பதிலாக தங்களை ஒரு மாற்றுச் சக்தியாக மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று ஜே. வி. பியைச் சேர்ந்த ரெல்வின் சில்வா தெரிவித்தார். (அ-ஐ-10)


## இன்று ஞாயிறு
## 23 - 03 - 97

## திருமறைக்கலாமன்றம்
வழங்கும்
## "பலிக்களம்"
(திருப்பாடுகளின் காட்சி)

இலங்கை நேரம் மாலை - 6.15 — 8 30 மணி வரை

இடம்: மன்ற அரங்கு, பிரதான வீதி.

பிரவேசம்: இலவசம்

(ஆசனப் பதிவு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

குறிப்பு: '' பலிக்களம் '' திருப்பாடுகளின் காட்சியை முன்னிட்டு 512 பிரிகேட் அனுமதியுடன் இரவு ஊரடங்கு யாழ்ப்பாணப் பட்டினம் — கோண்டாவில் தெற்கு, இருபாலை மேற்கு, நாவற்குழி ( பாலம் ) நாவாந்துறை தெற்கு வரை இலங்கை நேரம் 9.00 மணிவரை தளர்த்தப்பட்டுள்ளது.

கௌரவ செயலாளர்,
திருமறைக்கலாமன்றம்

(சி/367)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org